www.tamilrangam.net

Raya

1989
OCTOBER-NOVEMBER



# தேடல்

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தும் 'தேடலில்' மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்படுகின்றன.
ஆதலால் ஆக்கதாரர்கள் தமது ஆக்கங்களுக்குப் பொறுப்பாளராகின்றனர்.

—ஆசிரியர் குழு

**THEDAL**

O.P.A.L.

B.P NO:166

92805 PUTEAUX CEDEX

FRANCE

பெயர் முகவரியிடப்படாததும், கண்ணியக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடியதுமான கடிதங்கள், மற்றும் விமர்சன ஆக்கங்கள் எதுவும் எமது பரிசீலனைக்காகவோ, அல்லது பிரசுரிப்பதற்காகவோ எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

—ஆசிரியர் குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# 1917 சோவியத் புரட்சி

வர்க்கங்களாகப் பிளவுண்டுகிடக்கும் இப்புவிமேற்பரப்பின் பெரும்பகுதி ஒன்றில் ஓர்நாள் இருட்டுப்போர்வை விலக்கி இனிய பூபாள இராகம் இசைத்தது.

புத்தம் புதுச்சூரியனும் கீழ்த்திசையில் அன்று புதுமெருகோடு புன்னகைத்தான்.

இன்றைக்கு எழுபத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில்....

சுரண்டல், ஒடுக்குமுறை, எதேச்சாதிகாரம் என்பவற்றிற்கெதிராய்க் கிளர்ந்தெழுந்த ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட தொழிலாள, விவசாய, பாட்டாளி மக்களினால்-

ஓர் புதிய வரலாறு அந்த மண்ணில் படைக்கப்பட்டது.

ஆம், மாபெரும் ஒக்டோபர் புரட்சிமூலம் உலகின் முதலாவது உழைக்கும் மக்களின் ஆட்சி 'மாமேதை லெனின்' தலைமையிலே சோவியத் ருஸ்யாவில் ஸ்தாபிக்கப்பட்டது.

மாறாதது என்றும், நிலையானது என்றும் இறுமாப்புக் கொண்டிருந்தவர்களுக்கு பரிணாமவிதியின் மகத்துவம் புரியவைக்கப்பட்டது.

உலகின் அனைத்து விடயங்களுமே கேள்விக்குள்ளாக்கப்பட்டன.

'மார்க்ஸ்' குறிப்பிட்ட புரட்சிகரசக்தியாகிய பாட்டாளிவர்க்கம் தனது வரலாற்றுப் பாத்திரத்தை உலகுக்குணர்த்தியது,

பசி, பட்டினி, வறுமை, துன்பம், துயரம் என்று உழைக்கும் மக்கள் பரிதவிக்க, உப்பரிகையிலே உல்லாசம் கண்டுகொண்டிருந்த ஜார் மன்னனும், முதலாளிகளும் உருக்குமதி கொண்டவர்களின் புரட்சியிலே தூக்கி எறியப்பட்டார்கள்.

மார்க்ஸிய, லெனினிய சித்தாந்த ஒளியிலே வழிநடந்த இப்புரட்சி முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகளைக் கிலிகொள்ளவைத்தன. இப்புரட்சியின் முனையை மழுங்கடிப்பதற்காக உலகின் அனைத்து சுரண்டும் வர்க்கங்களும் ஒன்றுசேர்ந்தன.

ஆயினும் அனைத்து தடைகளையும் தகர்த்தெறிந்து சோவியத்ருஷ்யா மாபெரும் சோசலிச முகாமாக வளர்ச்சியடைந்தது.

அடக்கி ஒடுக்கப்படுகின்ற சுரண்டப்படுகின்ற உலகின் அனைத்து உழைக்கும் மக்களுக்கும், இப்புரட்சி நம்பிக்கை ஒளியைக் காட்டியது.

அது பல நாடுகளின் தொழிலாள வர்க்கங்களில் பலமாக எதிரொலித்ததை இந்த நூற்றாண்டின் வரலாறு சொல்கிறது.

இந்த வரலாற்றிலிருந்து நாமும் கற்றுக்கொள்வோம்.

மார்க்ஸிய, லெனினிய சித்தாந்த அடிச்சுவட்டில் எமது தேசத்து அனைத்துஒடுக்குமுறைகளையும் தகர்தெறிந்து, சமத்துவ, சமதர்ம சமுதாயத்தைப் படைக்கபோகும் எழுச்சிமிகுபயணம் இந்த நூற்றாண்டில் இன்னொரு வரலாற்றைப்படைக்கட்டும்.

www.tamilrangam.net

## எமது தேடலில்...

# "அம்பலமாகும் கூட்டுச்சதிகள்"

முழு இலங்கையுமே அமைதியற்றுத் தவிக்கும் இன்றைய சூழலில்,
"நாடு இரண்டாகப் பிரிந்துகொண்டிருக்கிறது. அரசாங்கம் மௌனமாகப்பார்த்துக்கொண்டிருக்கிறதே".
என்று இனவாதத்தையும், தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதத்தையும் இன்னும் அதிகரிக்கத்தூண்டும்

-சில சிங்கள அமைச்சர்களும்,

நிர்வாகத்தைச் சீர்குலைப்பவர்கள் என்ற ரீதியில் தமக்கெதிரானவர்களை வேட்டையாடும்

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின்

-மகாணசபை ஆட்சியாளர்களும்

தமிழீழமே முடிந்த முடிவெனக்கூறி இறுதியில் "ஈழத்தை நாங்கள் கேட்கவில்லை, நாங்கள் பிரேமதாஸவையே நம்புகிறோம், அவரே எங்கள் ஜனாதிபதி" என்று கூறி, தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையின் உச்சத்தை தொட்ட பிரேமதாஸாவையும், பாசிச யு.என்.பி.அரசையும் தமிழ் மக்களின் நண்பனாகக் காட்ட முயலும்

-புலிகளும், புலிகளது அன்டன் பாலசிங்கம் போன்றோரும்,

இனவாதத்தை உள்ளார்ந்த ரீதியில் கொண்டு

தோட்டத் தொழிலாளர்கள், வடகிழக்கு தமிழ் மக்கள் மீதான எதிர்ப்பையே இந்திய எதிர்ப்பாக காட்டும் பயங்கரவாதக்குழுவான

ஜே.வி.பி யினரும்

என்னும் இத்தகைய சூழலில் இவைகளின் மத்தியில்-

இந்தியப்படை விலகல் என்னும் விடயம் ஒரு திருப்பத்தை அடைந்திருக்கிறது.. டிசம்பர் 31க்குள் முழுப்படையும் வாபசாகும் என்று அறிவித்தபடி அம்பாறைமாவட்டத்திலிருந்து முதற்கட்டமாக இந்தியப் படைகள் வாபஸாகியிருந்தாலும் முற்றுன படைவிலகல் என்பதிலிருக்கும் முழு உண்மைகளையும் இப்போது சந்தேகத்திற்கிடமில்லாமல் உறுதிசெய்ய முடியாதுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் 13வது திருத்தச் சட்டத்திலுள்ள மாகாணசபைக்கான அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான யு.என்.பி அரசின் -மௌனம் மீது சந்தேகம் எந்தளவுக்கு உள்ளதோ அந்தளவிற்கே இதனையும்நோக்கவேண்டியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இருதரப்பும் பரஸ்பரம் எந்தளவுக்கு தமது லாபத்தைப் [illegible]கின்றன என்பதைப் பொறுத்தே ஏனைய நிலைமைகளை எடைபோடமுடியும். யு. என்.பி அரசாஙை மூன்று எதிர்கொள்ளும் ஜே.வி.பி யினரின் பிரச்சனையின்அளவு கனதியைக் கொண்டதாக இந்தியப் பிரச்சனை அதற்கு இல்லை எச்சுறு கூறலாம். ஆனால் ஏனைய சிங்கள இனவாத சக்திகளின் பிரசாரங்களுக்கு மத்தியிலே தமது அரசைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இந்திய எதிர்ப்பு நிலை அதற்குதேவைப்படுகிறது.

ஜே.வி.பியின் நிலையும் கூட இதுதான். அதாவது இந்திய இராணுவத்தினரின்வருகைதான் ஜே.வி.பி யினரின் போராட்டத்திற்கு(?) காரணமல்ல. இந்தவகை-யில் ஏற்கனவே அதிகாரத்தைக் கைப்பற்றத் துடித்துக்கொண்டிருந்த ஜே.வி.பியினருக்கு அது ஒரு காரணமாகியது. ஏனெனில் சிங்கள மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பென்பது தமிழர் எதிர்ப்பை உள்ளடக்கியதாகவே காலாகாலமாக இருந்து வருகின்றது. இந்தவகையில் நாட்டைத் துண்டாடிவிட்டதாகவும், யு.என்.பி அர சாங்கம் தமிழர்களுக்கு வடகிழக்கைத் தாரைவார்த்துவிட்டது என்பதாகவும்சிங்கள மக்கள் மத்தியிலே அரசுக்கெதிரான இனவாதப் பிரச்சாரத்தைக் கிளப்புவதற்கு ஜே.வி.பியினருக்கு இது ஒருசந்தர்ப்பமாக அமைந்தது.

புலிகளைப் பொறுத்தவரையில் இந்திய எதிர்ப்பு நிலைக்கு நியாயமான காரணங்களைக் கூறிக்கொண்டாலும் இந்தியாவின் வருகைக்கு ஏனைய இயக்கங்களோடுபுலிகளும் ஒரு காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. இடைக்கால நிர்வா-கத்தில் ஏனைய இயக்கங்களுக்கும் இடஒதுக்கீடு செய்தமையும், தம்மையே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளாமையுமே அவர்களது இந்தியாவுடனான போருக்கு காரணமாகின்றன. ஆயினும் அதற்காகச் சிங்கள அரசின்நட்பை புலிகள் நாடுவதென்பது 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பதைத்தான் காட்டுகிறது.

யாரால் தமிழ் மக்கள் காலாகாலமாக ஒடுக்கப்பட்டார்களோ, யாருடைய அரசால் தமிழ் மக்கள் இத்தனை இழப்புக்களையும், இன்னல்களையும், சொல்லொணாத்துயரங்களையும் அனுபவித்துவந்தார்களோ அந்த சிங்கள யு.என்.பி அரசையும், அதன் ஜனாதிபதியையும் இன்று நம்புவதென்பது வேதனைக்குரியது. இந்திய அரசின் பிரித்தாளும் தந்திரத்திற்கு-

ஈ.பி.ஆர்.எல்.எவ்பினரும், அதுசார்ந்த ஏனைய குழுக்களும் பலியாகிவிட்டனர்- என்பதைப் போல, சிங்கள அரசின் பிரித்தாளும் தந்திரத்துக்கு புலிகள் பலியாகியுள்ளனர் எனப்படும் கூற்றிலும் உண்மை உண்டு. ஏனெனில் இந்தியா வெளியேறிய பின் புலிகளைக்கொண்டு ஏனைய இயக்கங்களை ஒடுக்கலாம் என்பது சிங்கள அரசின் கணிப்பு. இன்று தமிழ் மக்களின் ஆபத்பாந்தவர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்ள முயலும் சிங்கள அரசின் கடந்தகால செயற்பாடுகளை வரலாற்றிலிருந்து ஒருபோதும் மறைத்துவிடமுடியாது. இனவாத சிங்கள அரசால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட '83 ஜூலை இனக்கலவரத்தின்போது அப்பாவித்தமிழ் மக்களின் உயிரும், கோடிக்கணக்கில் பெறுமதிவாய்ந்த உடமைகளும் சூறையாடப்

www.tamilrangam.net

பட்டுக்கொண்டிருந்தபோது, 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று முழங்கிய அதே சிங்கள அரசு இன்று தனக்கு மாபெரும் நெருக்கடி ஏற்பட்டபோதே அவசர அவசரமாக அது 'சர்வகட்சி மகாநாட்டைக்கூட்டுகின்றது. எனவே தமிழர்கள் மீது சிங்கள அரசு அக்கறைகாட்டுவதென்பது' 'ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகின்ற' கதையாகத்தான் . .' முடியும்

எனவே இந்தியப்படையின் வெளியேற்றம்தான் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கும்பூரண சுதந்திரத்துக்கும் வழிவகுக்கும் என்று காரணத்தைக் குறுக்கிக்கொள்வது நகைப்புக்குரியது. அதுவும் ஒரு முக்கியகாரணம்தான் என்பதை மறுக்கமுடியாது. ஆனால் தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து இலங்கை அரசும், விடுதலை இயக்கங்களும் எந்த ரீதியில் உடன்பாட்டுக்குவந்துள்ளன.? புலிகள்-அரசு பேச்சுவார்த்தையும்-கூட இரகசியமாகவே உள்ளன. தமிழ் மக்கள் மத்தியில் நிரந்தர அமைதியைஏற்படுத்தவென்று உண்மையில் பிரேமதாசா விரும்பியிருந்தால் எல்லா இயக்கங்களையும் அழைத்துப் பேசியிருக்கலாம். எனவே இது மேலும் இயக்க மோதலைவலுப்படுத்தி தமிழரை அழிப்புக்கு குழி பறிக்கும் செயலாகவே அமைகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் இந்தியாவின் வருகைக்கு எத்தனை நியாயமான காரணங்களை கற்பித்துக்கொண்டாலும், இந்திய இராணுவத்தினரின் தொடர்ச்சியான இருப்புக்கு அவர்கள் கூறும் காரணங்கள் ஏற்கக்கூடியன அல்ல. எந்த ஒரு நிலையிலும் எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கவேண்டும். ஓர் அன்னிய இராணுவத்தின் இருப்பென்பது எத்தகைய நியாயப்படுத்தல்களின் மத்தியிலும் அது ஒருஆக்கிரமிப்புதான் என்பதைத் தவிர வேறு மாற்று நியாயமே அதற்கு இருக்க முடி-யாது.

இறுதியாக வெளியான புலிகளின் அறிக்கையின்படி தாம் மாகாணசபைத் தேர்தலில்நிற்கப்போவதாக புலிகள் அறிவித்துள்ளனர். இன்றைய மகாணசபைக்குரிய அதிகாரங்களை வழங்க மறுக்கும் சிங்கள அரசு, புலிகள் வடக்குகிழக்கு மாகாணசபையை ஏற்றால் வழங்குவார்கள் என்று எதிர்பார்ப்பது நடக்கமுடியாதது. மேலும் இப்போதைய மாகாண சபையினர் அமைத்துக்கொண்டிருக்கும் முப்பதாயிரம்பேர் கொண்ட இராணுவப் பிரிவைக் கலைக்கவேண்டுமென புலிகள் கோருவதில் நியாயமிருக்கலாம், ஏனெனில், அமைக்கப்படுகின்ற இராணுவப்பிரிவு ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் அதன் ஆதரவு இயக்கங்களைச் சார்ந்ததாக இருக்குமாதலால் புலிகள் அதனை தமக்கு எப்போதும் அச்சுறுத்தலாக இருக்குமென்னும் பட்சத்தில் -நிராகரிக்கலாம். ஆனால் அதற்காக வடகிழக்கில் சிங்கள இராணுவத்தைக் கோரியிருப்பதையும், அவர்களோடு தாம் சேர்ந்து இராணுவப் பிரிவை அமைக்கப்போவதாகவும் புலிகள் கூறுவதை எக்காரணம் கொண்டும் ஏற்கமுடியாது.

ஜே.வி.பி.யினரின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இன்று யு.என்.பி அரசு திண்டாடுகிறது. முழு இலங்கையிலும் எல்லா முற்போக்கு சக்திகளுக்கும்பாரிய அச்சுறுத்தல் நிகழ்கிறது. மொத்தத்தில் வர்க்க சக்திகள் தங்கள் தங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

நலன்களுக்காக அவை சார்ந்து சண்டைப்போட்டுக் கொள்கின்றன. இச்செயற்பாடுகள் அனைத்தும் இழப்பதற்கு எதுவுமேயில்லாத ஒடுக்கப்படும் தொழிலாள, பாட்டாளிவர்க்க சக்திகளின் ஒன்றிணைப்பினையும், தங்கள் விதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்கின்ற அவர்களது நிலைப்பாட்டினையும் எந்த விதத்திலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது என்பதில் மட்டும் எதுவித சந்தேகமும் இல்லை.

---



# யதார்த்தம்

மலைகள், மரங்கள்
செழிப்பாய் வயல்கள்...
சலசலக்கும் ஓடைகள்...

ஜொலிக்கும் உடைகளில்
மேகங்களின் மீது
ஆடிப்பாடும்
அழகிய பெண்கள்....

ஐம்பது பேர்களை
ஒண்டியாய் வீழ்த்திய
படிக்காத கூலியாள்
பண்ணையார் மகளைக்

கல்யாணம் பண்ணிக்கொண்டு
களிப்போடு கையசைத்தான்

திரைவிழுந்தது
விளக்குகள் எரிந்தன
கூட்டத்தோடு வெளியே வந்தேன்

சாலை எங்கிலும்
தலைச்சுமைகளோடு
வேலை தேடி
அலைந்தனர் மனிதர்
சூரிய ஒளியில்
கண்கள் கூசின.

— ரவிக்குமார்

*****************************************



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# பாரிஸ் தமிழர் கல்வி நிலைய

## 3ஆவது வருட மலர் வெளியீடு.

இன்று 'விமர்சனம்' என்ற பதம் பலரது கண்ணோட்டத்தில் தவறான அர்த்தத்தில் புலப்படுகிறது. விமர்சனம் என்பதை அவர்கள் 'காய்த்த மரத்திற்கு கல்லெறிதல்' அல்லது ஒரு விதமான 'தாக்குதல்' என்ற அர்த்தத்தில் விளங்கிக்கொள்கின்றனர். அப்படியானதொரு நிலைமையும் இங்கு இல்லாமலில்லை. ஆனால் அவைகளை விமர்சனம்என்றபதத்திற்குள் அடக்கமுடியாது. உண்மையில் 'விமர்சனம்' என்பது சமூகத்திற்கு தேவையான ஒரு நல்ல விடயத்தினை நெறிப்படுத்தி அதன் வளர்ச்சிக்குத் துணைநிற்பதேயன்றிஅதனை அழித்துவிடுவதற்கல்ல என்பதனை புரிந்துகொள்ளல் வேண்டும்.

இந்தவகையில் 'பாரிஸ் தமிழர் கல்வி நிலைய' வளர்ச்சியின் மேல் அக்கறைகொண்டேஅதுபற்றிய விமர்சனங்களை எமது தேடல் இங்கு முன்வைக்கிறது.

எமது நேற்றைய முகங்களை இழந்து புதிய முகங்களை அணிந்துகொண்டு அகதி என்ற முக்காடுடன் அன்னியத் தெருக்களிலே, தொலைத்துவிட்ட எம்வாழ்க்கையைத் தேடிச் சல்லடை போடும் இன்றைய நாளில்...

எமது இருப்பினை இங்கேயே உறுதிப்படுத்திக்கொள்வதை எமது சந்ததியின் ஒரு பகுதியினரை முற்றாக இங்கே வேர்விடச் செய்யும் கைங்கரியத்தை யாராலும் அனுமதிக்க முடியாது. கல்வி நிலையத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டு, கலைநிகழ்ச்சிகள்யாவும் பழைய காலத்து செயல்முறைகளையே ஒத்திருக்கின்றன. நாங்கள் அகதிகள் என்னும் நினைப்பும் எமது தேசம் எரியும் தீயின் நடுவில் உள்ளது என்பதும், எமது சிந்தையில் இருக்குமாயின் - எமது அனைத்து செயற்பாடுகளும் சமூகப் பிரக்ஞை சார்ந்ததாக - வே இருக்கும். தேசத்தை நோக்கிய வகையில் நிகழ்ச்சிகளை அமைத்துக்கொள்வதோடு, அவைபற்றிய உணர்வினூடாக கல்வியூட்டப்படுமாயின் அவை வரவேற்கத்தக்கது.

மேலும், கல்வி நிலையத்தின் தலைமைக்காப்பாளர், வேறொரு சந்தர்ப்பத்தில் ஓர் இலக்கியக்கூட்டமொன்றில் ஆற்றிய உரையிலிருந்த சில கருத்துக்களை மறுத்து ஒரு பத்திரிகை எழுதியிருந்தமையை,அதுவிமர்சனப் பண்பிலிருந்து தவறியிருந்தது உண்மையெனினும், அதனை அவர் தங்கள் கல்விநிலையத்தை தாக்கி எழுதியதாக எடுத்துக்கொண்டு அதே பாணியில் அதற்குப் பதில்தாக்குதல் தொடுப்பதற்கான ஒரு களமாக கல்வி நிலைய ஆண்டுவிழா மேடையைப் பயன்படுத்திக் கொண்டமை யாராலும் ஏற்றுக்கொள்ளமுடியாததொன்று. 'உன்னையே நீ அறிவாய்' என்ற மலரின் அட்டைப்படத்திற்கான விளக்க

www.tamilrangam.net

மாக மலரின் உட்பக்கத்தில் இதே தலைமைக்காப்பாளரால் கொடுக்கப்பட்டிருந்த விளக்கத்திற்கும் அவர் மேடையில் பேசிய பேச்சுக்கும் எந்தவிதத்திலும் சம்மந்தமேயில்லை.

விழாவில் முக்கிய விடயமாக எதிர்பார்க்கப்பட்ட 'மலர் வெளியீடு' விழாவில் முக்கியப்படுத்தப்படாது விடப்பட்டதுடன் மாத்திரமல்ல, இலக்கிய உள்ளங்களையும் புண்படுத்தியது. ஏனெனில், அது ஒரு வழிமுறையாக வந்த மரபாக, வியாபாரத்தனமாக மலரின் முதற்பிரதியும், இரண்டாவது பிரதியும் பெயர் குறிப்பிடப்பட்டு மேடைக்கு அழைக்கப்பட்ட கடை முதலாளிகளால் வாங்கப்பட்டது. வெறுமனே விளம்பரங்களையும், கல்விநிலைய செய்திகளையும் மாத்திரம் அம்மலர் தாங்கியிருக்கவில்லை, அவ்விதழ் ஆசிரியரே மேடையில் அதுபற்றிக் குறிப்பிடும்போது ஒவ்வொரு துறையிலும்சிறப்புப்பெற்றவர்களிடமிருந்து ஆக்கங்களை வாங்கி அம்மலரை இலக்கியத்தரத்திற்கு உயர்தியிருப்பதாக குறிப்பிட்டார். அப்படியாயின் அம்மலரின் முதற்பிரதியை கொடுப்பதற்குஅங்கே ஒரு இலக்கியவாதியை, அல்லது ஒரு இலக்கிய வாசகனைக்கூடவா அவர்களால் கண்டுபிடிக்கமுடியவில்லை.? இத்தனைக்கும் அம்மலருக்கு அட்டைப்படம் வரைந்து கொடுத்த 'கலைஞர்' திரு.சாம்சன் மேடையிலே தானாகச் சென்று மலரை வாங்கினார். அவரை மேடையிலிருந்தவர்கள் யாருமே கண்டுகொள்ளவில்லை. கலை, இலக்கியத்தை இதைவிட வேறு எப்படி அவமதிக்கமுடியும்?

மலர் வெளியீட்டுடன் ,கல்வி நிலையத்தினரால் நடத்தப்பட்டு மலரில் இடம்பெற்ற கவிதை, சிறுகதைப் போட்டிகளுக்கான முதற்பரிசு பெற்ற ஆக்கங்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. ஆனால் அவ்வாக்கங்களை யார் பரிசீலித்தார்களோ அவர்கள் அதற்கான விளக்கங்களை மேடையிலோ, அல்லது மலரிலோ கூடவெளியிடவில்லை. ஓர் இலக்கியப் போட்டியின் நடுவர்களாக செயல்பட்டவர்கள் தமது தேர்வு முறையை எந்த அடிப்படையில் நிகழ்த்தினார்கள் என்பதையும், நிராகரிக்கப்பட்டவையும், பரிசுக்குரியவையும் எந்த எந்த காரணங்களின் அடிப்படையிலேக் கொண்டு அமைகின்றன என்பதையும் விளக்குதல் இலக்கிய தர்மமாகும். ஏனெனில் படைப்பாளிகளுக்கு இவற்றிற்கான இத்தகைய காரணங்கள் ஓர் சுயவிமர்சன அடித்தளத்திற்கான அவசிய தேவைகளாகின்றன.

உண்மையிலேயே நன்நோக்கங்களையும், சேவை மனப்பான்மையினையும் கொண்டவர்களின் கடும் முயற்சியினால் உருவான இப் 'பரிஸ் தமிழர் கல்வி நிலைய' மானது தற்காலத் தேவைக்கேற்றவாறு சிறப்பாக அமையவேண்டுமென்பதுதான் சமூகநலனில் அக்கறை கொண்டவர்களது விருப்பமாக இருக்கமுடியும். எனவே மேற்கூறப்பட்ட இவ் விமர்சனங்களை இக்கல்விநிலையமானது தனது இனிவருங்காலத்தைய ஆரோக்கியமான நகர்வுக்குரிய ஒன்றாகக்கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



# இரண்டாவது பிறப்பு.

கரைந்துகொண்டிருக்கிறது காலம்
வெயில் நேரத்து
தெருக்களில் உறைந்த
பனிக்கட்டிகளைப் போல,

அழைப்புவிடுத்துத் தோற்றுப் போகிறது
வாழ்க்கை

பேதம் காணமுடியாத
இரவுகளும், பகல்களும்
அரங்கேற்றமில்லாத ஒத்திகைகளாய்
புதுப்புது முகங்களை
அணிந்து கொண்டு
நீண்டுகொண்டு போன
ஒவ்வொரு பொழுதுகளும்,

இங்கேயும்
நிலவும், வானும் காற்றும் மழையும்
உயிரும் எங்கே ?... எங்கே?..

வாழ்க்கையை
ஆற்றிலே தொலைத்து
குளத்திலே தேடும் சுந்தரர்களாய்

இரெண்டாவது பிறப்பெடுக்கத்
தற்கொலைபுரிந்தவர்கள்

கண்களை விற்றுச் சித்திரம் வாங்கி
காட்சிப் பொருட்களாய்
நாமே மாறி
உலகமெங்கிலும்
உரக்கவே சொல்கிறோம்,

வந்து பாருங்கள்
வந்து பாருங்கள்

இந்த நூற்றுண்டில் வாழும்
மூத்த பெரும்
பழங்குடிநாங்கள்

→ அருந்ததி

www.tamilrangam.net

# மூளைக்குள் வெடிமருந்தைத் திணித்ததால் மூளைசாலிகள் இனித் தேவையில்லை...?

## மானுட மதிப்புகளின் மீது மற்றுமொரு செருப்பு.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் உடற்கூற்றியல் துறைத்தலைவரும் அதன் ஒரே விரிவுரையாளருமான கலாநிதி. இராஜினி திராணகம அவர்கள் 21.9.89 அன்று 'ஆயுதமனநோய்' பிடித்த மனிதகுல விரோதிகளினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இது வாழ்வு மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கு விடப்பட்ட மாபெரும் சவால். மனிதநேயமுள்ள எவராலும் இது மன்னிக்கப்பட முடியாதமறக்கப்படமுடியாத ஒன்று. மனிதனின் பேச்சுக்கு, எழுத்துக்கு, சிந்தனைக்கு ஆயுதங்களினால் விலங்கிட்டு ஆனந்தம்கொண்டாடுபவர்கள் நிச்சயமாக தங்களை ஒரு விலங்கு வாழ்க்கைக்குத் தயார்படுத்திக் கொண்டவர்களே. "கருத்தைக் கருத்தினால் சந்திக்க முடியாத கோழைத்தனம், ஆயுதங்களைத் துணைக்கழைக்கவைத்திருக்கிறது" என்று ஏற்கனவே நாம் எழுதியமை காய்ந்துபோகும் முன்னரே இன்னொரு வெறிச் செயல். வழமைபோலவே இக்கொலையும் கொலைஞர்களால் உரிமைகோரப்படவில்லை.

மனித நேசிப்புள்ளவனும், சக மனிதனுக்கிழைக்கப்படுகின்ற கொடுமைகளைக்காணச் சகிக்காதவனும் தான் போராடுவதற்கு ஆயுதந் தூக்குவான். ஆனால் மனிதத்தை மறந்துபோனவர்கள் ஆயுதந்தூக்கியதால் மாற்றுக் கருத்துக்கு மருந்து மரணம் தான் என்கின்ற வேதத்தைதவிர வேறெதைக் காணமுடியும்?

கலாநிதி. இராஜினி திராணகமவின் படுகொலையானது எச்சசொச்சமாக இன்னும் ஈழத்தில் எஞ்சியிருக்கும் புத்திஜீவிகளுக்கெல்லாம் விடுக்கப்பட்ட ஒரு பாரிய அச்சுறுத்தல். கண்களைப் பொத்தி, வாய்மூடி மெளனியாகத் திரியவேண்டுமென்கின்ற எச்சரிக்கை கல்லூரி அதிபர் ஆனந்தராஜா, சிருஷ்ணானந்தன், அரசாங்க அதிபர்கள் ராமனாதன், பஞ்சலிங்கம் போன்ற அறிவு ஜீவிகளின்பட்டியலில் இப்பொழுது கலாநிதி இராஜினி திராணகம, இப்படியே அறிஞர்கள், புத்திஜீவிகள், சமூக சேவையாளர்கள் மீதெல்லாம் துப்பாக்கி அராஜகம் நடத்தப்பட்டமையால் ஏற்கனவே எமது நாட்டிலிருந்து புத்திஜீவிகளின் வெளியேற்றம் அதிகளவில் நடந்தேறியது. இன்னும் தொடர்ந்திருப்பவர்களும் இதன் காரணத்தால் எப்பொழுது நாட்டைவிட்டு வெளியேறுவோமென்று நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றனர். அறிஞர்கள், சிந்தனையாளர்கள், கல்விமான்கள், கலைஞர்கள் என்று யாவரும் இல்லாதொழிந்த ஒரு காட்டுமிராண்டிச் சமுதாயம் வேண்டி துப்பாக்கிகள் தவமியற்றுகின்றன. மூளையைக் களைந்தெறிந்து மண்டையோட்டுக்குள் வெடிமருந்தைத் திணிக்கும் வீரமிகு போராட்டம் விழாகொள்கிறது.

www.tamilrangam.net

கொலைசெய்யப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தாயான இராஜினி திரணகம இலண்டனிலுள்ள லிவர்பூல் பல்கலைக் கழகத்தில் வைத்தியத்துறையில் கலாநிதி பட்டம்பெற்றவர். நினைத்திருந்தால் அவர் அங்கேயே ஆடம்பரமாக, கைநிறையச் சம்பாதித்துக்கொண்டு பெரிய வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். இலங்கையைவிட்டு வெளியேறிய புத்திஜீவிகள் அப்படித்தான் வாழ்கிறார்கள். ஆனாலும், தேசப்பற்று இவரை இலண்டனில் இருக்கவிடவில்லை. ஈழத்திற்கு இழுத்தது. யாழ். பல்கலைக்கழக உடற்கூற்றியல் துறையில் விரிவுரையாளர் பற்றாக்குறையினால் அதன் ஒரே விரிவுரையாளராக முழுப் பொறுப்பேற்று திறம்பட நடத்தினார். பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்கள் இதனால் பெரும்பயனடைந்தார்கள். இந்தவகையில் ஒரு சிறந்த தேசப்பற்றுள்ள , சேவையாளராகவே இவர் விளங்கினார்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமைமீறல்கள் அனைத்தையும் கண்டித்த இவர் தனி மனித சுதந்திரம் மீதான அனைத்துதளைகளுக்குமெதிராக தனது தர்மாவேசக் குரலினை எல்லா வகையிலும் வெளிப்படுத்தினார். கருத்துக்களின்மேல் ஆளுமை செய்யும் ஆயுதங்களின் மீதான தனது அதிருப்தியை அடிக்கடி பலசந்தர்ப்பங்களில்காட்டி கொண்ட இவர், வெறுமனே ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளராக மட்டுமன்றி, அதற்குமப்பால் சமூகநலனில் அக்கறைகொண்டு பெண்களின் சமத்துவம், சமாதான-வாழ்வு, உண்மையான ஜனநாயகம் என்பவற்றிற்காக அயராது குரல் கொடுத்து வந்தார். கலாநிதி இராஜினி திராணகம, ஏற்கனவே பொதுவாழ்வில் ஈடுபட்டு புலிகளியக்கத்திலிருந்து விலகி தற்போது இலண்டனில் வசிக்கும் திருமதி நிர்மலா நித்தியானந்தனின் சகோதரி என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு நடுநிலையாளராகநின்றனைத்து அராஜகங்களுக்குமெதிராக குரல்கொடுத்த இவரைப் படுகொலை செய்ததன் மூலம் தமது சமுதாயப்பார்வையின் வெறுமையை, அரசியல் வறுமையைக் , காட்டிக்கொண்டவர்கள் ஆயுதங்களின் மூலமாக மக்களின் எழுச்சியை, எழுச்சிமிக்கஅவர்களின் குரல்களை தொடர்ந்தும் அடக்கிவிடமுடியாது என்னும் பாடத்தை வரலாறு அவர்களுக்குணர்த்தும்.

விளக்கை அணையுங்கள்; விடிந்து விட்டது!

வேஷத்தைக் கலையுங்கள்; கூட்டமே கலைந்து விட்டது!

தனியறையில் தத்துவம் பேசாதீர்கள்; சந்தேகமாயிருக்கிறது!

வறட்டுக் கோஷங்களை விட்டொழியுங்கள்; வாழ்க்கை காத்திருக்கிறது!

— கார்க்கி

www.tamilrangam.net

# ஒரு கேள்வியும் ஒரு பதிலும்

**- S. அகஸ்தியர்**

(சோவியத் ரஸ்யா முதலாளித்துவத்தைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறதே, சோசலிஸம் தோற்றுப்போய் விட்டதா ?).

1960 வாக்கில் சோசலிஸத்தை நாடி விரைந்துகொண்டிருந்த சீனதேசம் அதிதீவிர தேசியவாதத்தினுள் சிக்குண்டபோது முதலாளித்துவப் பிரசாரங்களையும் விஞ்சும்வகையில் ஒருவித பொறுப்புமின்றிக் கண்ணைமூடிக் கொண்டு சோவியத் ரஸ்யாவையும் குருசேவையும் இப்படித்தான் அனல் பறக்கத் தாக்கிற்று. உலக சோஸலிய முகாமை இரண்டாகப் பிளக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்த சதி சீனவால் முன்னெடுக்கப்பட்டதால் கீழைத்தேச நாடுகளில் அதே ஏகாதிபத்தியம் சுலபமாகக் கால் வைக்க வழி செய்தது. உலகிலேயே மிகப் பலம்வாய்ந்த நாற்பத்தைந்து லட்சம் உறுப்பினர்கள் கொண்ட இந்தோனிஸியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் புரட்சியை ஏற்றுமதி செய்து பலவீனப்படுத்தியதோடு சுகர்ணோவையும் பதவியிலிருந்து நீக்கிஅமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியான சுகார்ட்டோவை அதிகாரத்தில் அமர்த்திக் கம்யூனிஸ்கட்சி உறுப்பினர்களையே கொன்று குவிக்க சீனவால் வழிசமைக்கப்பட்டது. சோவியத்ரஸ்ய எதிர்ப்பு வாதம் என்பது நேரடியாக அமெரிக்க ஏகாதிபத்திய நலனுக்கு இட்டுச் செல்லும் பாதை என்பதை சாதாரண ஒருவராலும் புரிந்துகொள்ளமுடியும். சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியை இயந்திர ரீதியாகவன்றி, இயக்கவியற் பாங்காக நடைமுறைசாத்தியப்படுத்தும் பாதையை ஒரு மார்க்ஸியவாதியால் தான் செப்பனிடமுடியும். ஒருவர் மார்க்ஸிய அறிஞராயிருக்கலாம். ஆனால் அவர் மாக்ஸியவாதியாக இருந்தால் மட்டுமே தலைசிறந்த கம்யூனிஸ்டாக இருக்கமுடியும். கம்யூனிஸ விரோதி ஒருபோதும் மார்க்சியவாதியாக இருக்கமுடியாது. மார்க்ஸியஅறிஞர் வேறு, மார்க்ஸியவாதி வேறு. சில மார்க்ஸிய அறிஞர்கள் புத்தகப்பூச்சிகளாய் இருப்பதற்குக்காரணமே மார்க்ஸியவாதிகள் மீது விசம் கக்குவதற்காகத்தான். அந்த வசதியையும் முதலாளித்துவம் அவர்களுக்குத் தாராளமாக வழங்கியுள்ளது. ஓர்மார்க்ஸிய அறிஞர் ஸ்தாபனரீதியாக கட்சியின் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுக்கொள்ளாவிடின் அவருடைய அறிவு அவருக்கு ஒரு மேதைத்தனத்தை உருவாக்கித் தனிநபர்வாதியாகப் பவனிவரச் செய்யும். அவர் ஓர் ஏட்டுச்சுரைக்காய் அவ்வளவுதான். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அவர் ஒருபோதும் மார்க்ஸியவாதியாகவோ கம்யூனிஸ்ட்டாகவோ இருந்துவிடமுடியாது.

சோவியத் எதிர்ப்புவாதம் என்பது லெனின் சொல்வதுபோல் இன்று சிறுபிள்ளை வாதம்போலாகிவிட்டது. இது நேரடியாக அமெரிக்க மற்றும் முதலாளித்துவ ஏகாதிபத்திய நலன்களுக்கே இட்டுச்செல்லும் என்பதை ஒரு சிறந்த மார்க்ஸியவாதியால் தான் புரிந்து கொள்ளமுடியும். சோவியத் மீது கண்மூடித்தனமான அபாண்டங்களைச் சுமத்திப்பிரசாரம் செய்தவர்கள் ஈற்றில் எந்த முகாமுக்குள் சிக்குண்டுபோனார்கள், என்பதற்கு எத்தனையோ சான்றுகளுண்டு. இன்று சீனாவில் நிகழ்ந்த சம்பவங்களும்தக் கசான்று.

இலங்கையில் அதிதீவிரம் பேசித் தாங்களே உண்மையான கம்யூனிஸ்ட் என்று சொல்லிக் கொண்டு கட்சியில் இருந்து பிரிந்துபோன என்.சண்முகதாசன் முதலில் சைனாவின்தீவிர ஆதரவாளராகவும் சோவியத் எதிர்ப்பாளராகமாறி அல்பேனியாவுக்கு ஆதரவாள ராகமாறியதையும், அவருடன் சென்ற பிரேமலால் குமாரசிறி, எச்.எம்.பி.முகைதீன் போன்ற முக்கிய உறுப்பினர்கள் ஈற்றில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினராகவே சேர்ந்த வரலாறும், ரோகணவிஜவீர கட்சிக்குள்ளிருந்து படிக்கப்போய் அதிதீவிரம் பேசி இன்று பாஸிசவாதியாகிவிட்ட வரலாறும் நம் கண் முன்னே நிகழ்ந்தவை. இலங்கையில் சோசலிஸத்துக்கான வேலைத்திட்டத்தோடு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இடதுசாரிகள் கூட்டணி அமைத்தமையும் எதிர்த்தே அவர்கள் கட்சியிலிருந்து வெளியேறியதற்குக் காரணம் கூறினார்கள். அவ்வாறு கூறிய அவர்களே ஈற்றில் சுதந்திரக் கட்சியில் உறுப்பினர்களாகவும் சேர்ந்தார்கள். அதிதீவிரம், தனிநபர் வாதம், சோவியத் விரோதம் என்பவையெல்லாம் சோசலிஸ விரோத சக்திகளுக்குள் செல்ல எப்படி வழிசமைக்கும் என்பதற்கு இது சிறிய உதாரணம். இதுபோன்ற பல உதாரணங்களை உலகளாவக் குறிப்பிடலாம். சோவியத் எதிர்ப்புவாதமான இந்தக்கோசம், மார்க்ஸிய இயக்கவியல் பரிணாம சூக்ஷ்ம நிலைபேற்றினைப் புரிந்துகொள்ளமுடியாத அல்லது தெரிந்து கொள்ள முடியாத சிலர் தடுமாறுகின்ற நிலையே தவிர வேறொன்றுமில்லை.

பிரபுத்துவ சமுதாய அமைப்பை நிராகரிந்துக் கொண்டுவந்த முதலாளித்துவம் பல லாயிரம் ஆண்டுகளாகியும் அதன் மிச்ச சொச்சங்களை நிராகரிக்காமல் தவண்டையடிப்பதால் அது ஆவேசித்து அவாவிநிற்கும் ஏகாதிபத்திய அமைப்பைக்கூட அதனால் விஸ்தரிக்க முடியாமல் திண்டாடுகின்றது. இதற்கிடையில் யப்பான், ஏகாதிபத்தியத்திற்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் தோன்றியுள்ள உற்பத்திப் போட்டி உலகத்தைப் பதட்ட நிலைக்கு ஆளாக்கியுள்ளதை மறைப்பதற்கு இரண்டு ஏகாதிபத்தியங்களும் சோசலிஸ முகாமைப்பற்றி அவதூறான பிரசாரங்களை கட்டவிழ்த்து விடுவது ஒன்றும் தற்செயலான அல்லது ஆச்சரியப்படத்தக்க விடயம் அல்ல. 'முதலாளித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வத்தின் உச்சக்கட்டமே ஏகாதிபத்தியமாகும். அதற்குமேல் அது ஓர் அடிகூட நகர முடியாது' என்று லெனின் எவ்வளவு 'அர்த்தபுஷ்டியோடு சொன்னார். 'நமக்கு மூக்கு போனாலும் காரியமில்லை, எதிரிக்குச் சகுனப்பிழை வரவேண்டும்' என்ற தோரணையில் 'நாம் ஏணியிலிருந்து வீழ்ந்தாலும் பரவாயில்லை, அதில் ஏறிநின்று சோசலிஸத்தையழித்துவிட வேண்டும்' என்று கங்கணங்கட்டிக்கொண்டு 'உலகில் ஏகாதிபத்திய -அமைப்பைக்கட்டி எழுப்பிவிடலாம்' என்றமனக்கோட்டையில் இந்த முதலாளித்துவம்நர வெறிபிடித்த கிட்லர், முசோலினி, கோயரிங் போன்ற நாஜிஸவாதிகளையும், இவைவெறிபிடித்த பாஸிஸவாதிகளையும்துணைகொண்டு இரண்டு உலக மகா யுத்தங்களையும் நடத்திப்பார்த்து விட்டது. அந்த யுத்தம் கூடத்தாம் எதிர்பாரதவகையில் தம்மைவிழுங்கிவிடும் என்று கண்ட அமெரிக்க, பிரிட்டிஸ் முதலாளித்துவமும் அவற்றின் நேசநாடுகளான ஐரோப்பிய முதலாளித்துவங்களும் இளம் சோசலிஸ சோவியத் நாட்டுக்கு எதிராக அந்த யுத்தத்தைத் தூண்டிவிட்டதோடு தம்மைப் பாதுகாத்துக் கொள்ள-வேண்டி சோவியத்துடன் சமாதான ஒப்பந்தமும் செய்துகொண்டன.

இன்று உருக்குலைந்து சிதைந்து போகும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பைக் கட்டிக்காப்பதற்கு ஐரோப்பிய பொதுச்சந்தை ஒன்றுக்காகத் தமக்குள் இழுபறிப்படுகின்றன. யப்பானிய ஏகாதிபத்திய மூலதனமோ தம்மை மிஞ்சி ஏப்பம்விட்டுவிடும் என்றும் கிலிகொண்டுள்ளன. முதலாளித்துவத்தின் உற்பத்தி மூலதனங்களுக்குள் . உண்டாகும் முரண்பாடு வர்க்கங்களுக்கப்பால் நின்று யுத்தங்களில் பாய்ந்து செல்லும் என்ற மார்க்ஸிய இயல்புவாதத்தினைக் கூர்ந்து நோக்கின் யுத்தங்கள் யாருக்குத்தேவைப்படுகின்றனவென்பதும் யாரால் சிருஷ்டிக்கப்படுகின்றனவென்பதும் புலனாகும். பல வருசங்களாக மூன்றாவது உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிடுமுகமாக முதலாளித்துவத்தின் ஆத்திரமூட்டும் சில்லறைத்தனங்களும் படுதோல்வி கண்டுள்ளன. இன்று சோவியத் நாட்டில் சோசலிஸ அமைப்பிலிருந்து முன்னேறும் கட்டத்தில் அதன் பரிணமவடிவங்கள் தோன்றுகின்றன.. இத்தோற்றங்களை உள்வாங்கமுடியாத, அன்றேல் சகிக்கமுடியாத பழமைவாதப் பிடிப்புள்ளவர்கள், தாம் கற்பனை பண்ணுகின்ற உலகத்தில் நப்பாசை கொண்டுள்ளன. இத்தகைய குழுவாதங்களின் முகமூடிகள் நீக்கப்பட்டு வருவதைக்கண்ட முதலாளித்துவம்தான் கிலிகொண்டு முழுசுகின்றது.

சோவியத்தினதும் அதன் தோழமை நாடுகளினதும் வரலாறு காணாத வேகமான முன்னேற்றத்தை அவதானித்துவரும் முதலாளித்துவம் உலக மக்கள் கண்ணில் அதனைமறைபதற்காகக் கண்கடை தெரியாமல் வழக்கம்போல் தங்களுக்குண்டான சகல பிரசார சாதனங்களையும் முடுக்கிவிட்டு வேடிக்கை பார்க்கின்றன. ஏதோ கொர்ப்பசேவ் வந்த பிறகுதான் கோயில்களும், கோயிற்பீடாதிபதிகளும், கோயிற்கோபுர மண்டபங்களும் திடீர்திப்பென்று மேகத்தால் வந்து சோவியத்துக்குள் குதித்துவிட்டதாகவும் காண்பிக்க எத்தனிக்கின்றன. சோவியத்தில் கோயில் இல்லை, குளம் இல்லை, மதம் இல்லை, மதவழிபாடு இல்லை மத ஆசார பூசாரிகள் இல்லை, என்றெல்லாம் மிக

www.tamilrangam.net

ஆரம்பகாலத்திலிருந்தே பச்சைப்பொய்களையெல்லாம் மிக அழகாகச் சோடித்துக் கட்டவிழ்த்த முதலாளித்துவங்கள், 1953ல் ஸ்டாலின் அமரரானபோது ரஸ்யாவில் உள்ளஆலயமணிகள் 'டாங்டாங்' கென ஒலித்தன. ஸ்டாலின் ஆத்ம ஈடேற்றத்துக்காக ரஸ்யாவின் முழுக்குடியரசுகளிலும் ஆங்காங்கே ஆராதனைகள் நடத்தப்பட்டன என்றெல்லாம் மாபெரும் சோவியத் நாட்டையும் ஸ்டாலினையும் கிண்டலும் கேலியும்செய்து தமக்குள் திருப்திப்பட்டுக்கொண்டன. கோயில், குளம், மதம் வழிபாடு இல்லை என்று எப்போதும் இவர்களால் ஓயாமல் பிரசாரம் செய்யப்பட்ட நாட்டில் ஸ்டாலின் அமரராகியவுடன் அவையெல்லாம் எங்கிருந்து 'திடீரெனச் 'சோவியத்துக்குள்குதித்தன? முதலில் அமெரிக்க ஐரோப்பிய முதலாளித்துவங்களே புழுகுமூட்டைகளை அவிழ்த்துவிட்டு அந்தப் பொய்களுக்குள் முதலில் மாட்டுப்பட்டுக்கொண்டன. சோவியத் சோசலிஸத்தின் வளர்ச்சியை - அதன் அமைப்பின் பரிணும வளர்ச்சியின் வேகத்தையுலக மக்களுக்கு இரும்புத்திரைபோட்டு மறைத்துக்கொள்கின்ற முதலாளித்துவமே சோவியத்தை 'இரும்புத்திரைநாடு' என்றும் தமது கைக்கூலிகளால் பிரசாரிக்கின்றது. பிரிட்டிஸ் அறிஞர் டி.என் பிரிட் எழுதிய 'இரும்புத்திரை' என்ற நூலில்இதனை விரிவாகப் பார்க்கலாம். முதலாளித்துவத்தின் வேகமான அவதூறல் பிரசாரமே சோசலிஸத்தின் வேகமான வளர்ச்சியைக் காட்டப்போதுமானது. எதுஎப்படியிருப்பினும் சோசலிஸ அமைப்பின் பரிணும வளர்ச்சியின் வேகத்தை- கம்யூனிஸ சமுதாயத்துக்குமாறும் அதன் வேகத்தை எந்த வல்லாதி வல்லவனும் தடுக்கமுடியவில்லை.-தடுக்கவும் முடியாது. அங்கே கோர்பச்சேவ் என்ற 'தனிமனிதர்' அல்ல, கம்யூனிஸ் கட்சியே அதன் சூத்திரதாரி. முதலாளித்துவ நாடுகளில்தான் மதங்களும் அரசுகளும் ஒவ்வொன்றின் தயவுகளோடு ஒன்றையொன்று பிணைக்கப்பட்ட சங்கிலிபோல் சுதந்திரமில்லாமல் இயங்குகின்றன. ஆனால் சோவியத்தில் அரசின் தயவை மதமோ, மதத்தின் தயவை அரசோ ஒருபோதும் நாடுவதில்லை. அது அது ஒன்றையொன்று கட்டிப்பிடித்து அழுவதுமில்லை. சோவியத்தில் மதம் அரசை விமர்சிக்கவும், மதத்தை மக்கள் விமர்சிக்கவும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு மேடையிலேயே மதத்தை ஆதரித்தும் எதிர்த்தும் விமர்சிக்கும் சுதந்திரம் அங்குதான் உண்டு. அங்கு தான் மதங்களும் சுதந்திரமாக இயங்குகின்றன. முதலாளித்துவ நாடுகளில் அல்ல. மதங்களைஎதிர்த்துப்பிரசாரம் செய்யவும் சோசலிஸநாடுகளில் தான் சுதந்திரமுண்டு- முதலாளித்துவநாடுகளில் அல்ல .

முதலாளித்துவத்தின் சுரண்டல் அமைப்பு எவ்வாறு தவிர்க்கமுடியாதபடி ஏகாதிபத்தியக் கட்டமைப்பிற்குக் கொண்டுவந்துவிடுகிறதோ, அவ்வாறு சோசலிஸ சமுதாய அமைப்பின் தொடர்ச்சியான ஜனநாயகபூர்வ விரிவு கம்யூனிஸ சமுதாய அமைப்பைத் தேடி விரைகின்றது. சோசலிச சமுதாயத்தில் 'உழைப்புக்கேற்ற ஊதியம்' பெறும் மனிதன், கம்யூனிஸ சமுதாயத்தில் தேவைக்கேற்ற ஊதியம் பெறுகின்றான். உழைப்புக்கேற்ற ஊதியம் தேவைக்கேற்றவாறு மாற்றமடையும்போது ஒரு சோசலிச அமைப்பின் கட்டமைப்புவிரிவடைவது இயல்பே. ஒன்றின் மாற்றம் இன்னொன்றின் தோற்றமாக மாறும்இயல்பேபரிணமம். இந்தப் பரிணும தோற்றம் இயக்கவியல் மறுப்புவாதமாக ஒருபோதும் நிகழுவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

[illegible]
பரந்து செல்லும் போதும் 'சோசலிச சமுதாயம் மாத்திரமே நமக்கெல்லாம் கதி அதுவே நிரந்தர சமுதாய அமைப்பு' என்று வாழாவெட்டியாக இதுகாலும் இருந்தசில இயக்கவியல் மறுப்புவாத எச்சசொச்சங்கள் தகர்பட்டுப்போவதும் நிராகரிக்கப்படு வதும் அதுபோன்று இயல்பே.

இதுவே இன்று மூன்றும் கட்டமாகச் சோவியத்தின் மறுசீரமைப்பில் நிகழ்ந்துகொண்டிருக்கும் புதிய மாற்றங்களாகும். மார்க்ஸிய லெனினியத்தின் சாதாரண இந்த அரிச்சுவட்டைக்கூடப் புரிந்துகொள்ளமுடியாத சூத்திரதாரிகளும், சமுதாய வளர்ச்சியை இயக்கவியற் பரிணாம தோற்றங்களுக்கு மாறாக் அடிகாம்ப்பழமாக்க இயந்திரரீதியில் பார்க்கும் கற்பனாவாதிகளுமே இந்தப் பிரசாரங்களில் மும்முரமாக ஈடுபடுகின்றனர். ' இன்று கோர்பச்சேவ் தலைமையில் சோவியத் முதலாளித்துவப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறது" என்று முதலாளித்துவங்களாலேயே ஓயாமல் சொல்லப்படுகின்ற பிரசாரங்களையே இவர்களும் தாங்கிப் பிடித்துக்கொள்வது ஒன்றும் வியப்புக்குரியதல்ல.

இரண்டாவது உலக மாகாயுத்தத்தின் போதும், தோழர் ஸ்டாலின் அமரத்துவமானபோதும், தோழர் குருசேவ் நிர்வாகத்தின்போதும் இவற்றைவிட மோசமாகப் பொய்ப்பிரசாரங்களைக் கட்டவிழ்த்த முதலாளித்துவங்களே வழக்கம்போல் தோழர் கோர்பச்சேவ் நிர்வாகத்தின்போதும் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றன. எனவே இப்போது மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் ஒன்றும் புதுமையோ வியப்போ அல்ல.

சோசலிச முகாமுக்குள் காலத்துக்குக் காலம் அதன் வளர்ச்சிக்கேற்ப நிகழ்ந்துவரும். மாற்றங்களை நிர்மாணிப்பவர்கள் கம்யூனிஸ்டுகளே தவிர முதலாளித்துவங்கள் அல்ல. இதை நாம் முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். இப்போ அழுதுவழிகிறது முதலாளித்துவமே தவிர சோசலிச நாடுகள் அல்ல. இன்று நிகழ்ந்துவரும் மாற்றங்களைப் பார்க்கின்ற முதலாளித்துவம் கிலிகொள்வதை நோக்கும்போது கோர்பச்சேவ் நிர்வாகத்தின் தற்போதைய விரிவுபடுத்தும் திட்டத்தை- மறுசீரமைப்புச் செய்து சோசலிச முகாமை மேலும் பலப்படுத்தும் திட்டத்தை ஏனைய சோசலிசப்படுத்தும் திட்டத்தை ஏனைய சோசலிஸ நாடுகளும் விரைவுபடுத்த வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றது.

முழுக்க முழுக்க ஒரு சோசலிஸ சமுதாய அமைப்புள்ள நாட்டில் என்றுமில்லாதவாறு ஒரு தேர்தலைப் பரவலாக நாடுபூராவும் நடத்தி, அங்கேயுள்ள பழமையான எச்சசொச்சங்களையும் விடுபட்டுப்போன மிதவாதப் பழமைவாதங்களையும், விரைந்து செல்லும், அதன் வேகத்திற்குக் குறுக்கே நிற்கும் போக்கையும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அப்பால்உள்ள பொதுமக்கள் மத்தியில் பரீட்சிக்கக்கூடிய மிகப்பெரும் வலிமை சோவியத் கம்யூனிஸ் கட்சிக்குமட்டுமல்ல, ஏனைய சோசலிஸ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்கட்சிகளுக்கும் சேர்த்தமையே சோவியத்தின் இன்றைய இன்னோர் பெரும்சாதனையாகும். இன்றைய சோசலிச முகாமிற்குள் நிகழும் வரலாற்றுமிக்க சாதனை இது. இந்தச் சாதனையைக் கண்டுசகிக்கமுடியாத முதலாளித்துவங்களே கெலிமண்டிப்போய்க் கிடக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

1956லவாக்கில் உலக மக்கள் கண்ணில் ஏகாதிபத்தியத்தின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு ஏகாதிபத்திய முகாமிற்குள்ளேயே முற்போக்குச் சிந்தனைவாதிகளையும் கொண்டு - செல்லும் மார்க்கத்திற்கு அதிதீவிர சோசலிச வாதிகள் போசித்ததை- அந்தப் பரிதாபத்தை நினைவிற் கொள்வோமாக. கண்மூடித்தனமான சோவியத் எதிர்ப்பானஅதன் விளைவால் இந்தப் பெரிய சீனதேசம் எப்படி ஆயிற்று? ஆயினும் அதன் ஆளுமை குன்றுமல் பாதுகாக்கும் நிலை சோசலிஸ முகாமால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உண்மையில் 'அமெரிக்க' ஏகாதிபத்தியம் வெறும் காகிதப் புலி அல்ல' என்பதை ஒவ்வொரு லெனினிய வாதியாலும் புரிந்துகொள்ளமுடியும். ஏகாதிபத்தியமோ அதன் நேசநாடுகளோ முதலாளித்துவச் சுரண்டல் அமைப்பைக் கட்டிக்காக்கும் பணியில் ஓய்ந்துபோகவில்லை. இந்தநிலையில் மார்க்ஸிஸ்டுகள்- கம்யூனிஸ்டுகள் உலக சோசலிஸ முகாமை வலிமைப்படுத்தவும் விரிவுபடுத்தவும் துரிதமாகச் செயற்படுகின்றார்கள். இதன்விளைவே சோசலிஸ நாடுகளில் மேலும் ஜனநாயக வழிகள் கையாளப்படுகின்றன.

தனிநபர் முதலீட்டு வியாபாரம், தாம் விரும்பின் இனங்கள் பிரிந்துபோகும் உரிமை என்பன லெனின் காலத்திலேயே உத்தரவாதப்படுத்தப்பட்டன. அந்த உரிமை சோவியத்குடியரசு நிர்வாகத்திற்குள்ளாகப் பூரணப்படுத்தப்பட்டது. அதன் பெறுகவே இன்றும்புதிய மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன.

அமெரிக்க, ஐரோப்பிய முதலாளித்துவங்கள் தங்கள் நாடுகளில் மக்களை மேலும் மேலும் சுரண்டுவதற்காகவே 'தனிநபர் சுதந்திரம்' 'ஜனநாயகம்'பேசுகின்றன. ஆனால் சோவியத் மற்றும் சோசலிஸ நாடுகள் மக்களை மேலும் மேலும் தேசிய சொத்துக்களில் பங்களிப்பாளர்களாச் சங்கமிக்க வைத்து தொழிலாள விவசாய வர்க்கத்திற்கும், பொதுமக்களுக்கும் ஜனநாயகத்தை மேலும்விரிவுபடுத்துகின்றன.

"மார்க்ஸியத்தின் அடித்தளம் ஆங்காங்குள்ள கம்யூனிஸ்கட்சிகளால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது" என்று இதனையே தோழர் லெனின் அழகாகக் கூறினர். அந்த லெனின்கூற்றுத்தான் இன்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் தோழர் கோர்பச்சேவ் நிர்வாகத்தினூடாக நிகழ்த்தப்படுகின்றது.

சோவியத் சோசலிஸ கம்யூனிஸ் விரோத முதலாளித்துவப் பத்திரிகைகள், ரேடியோக்கள், ரி.வீக்கள் போன்றவற்றின் ஓய்வொழிச்சலற்ற பிரசாரங்களில் கதிகலங்கி மதிமயங்கித் திக்குமுக்காடிப் போகிறவர்களும், வணிகக் கலை இலக்கியப் பிற்போக்குவாதிகளும் கற்பனைவாத சோசலிஸ்டுகளும் காலங்காலமாகச் சோவியத் விரோதப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிடுவதானது அவ்வப்போது முதலாளித்துவங்களின் அவசரஅவசியத்தேவையாகின்றது.

ஆனால், இதே முதலாளித்துவப் பிரசாரங்களிலேயே தாமும் மூழ்கிக் கண்மூடித்தனமாக அத்தபாணியில் அச்சொட்டாகப் பிரசாரம் செய்யும் ஒருவர் இருப்பின், அவர் நிட்சயம் ஒரு மார்க்ஸிஸ்ட்டாகவோ, கம்யூனிஸ்ட்டாகவோ இருக்கவேமாட்டார் என்பதும், அவர் எப்போதும் முதலாளித்துவ நலன்களைப் பாதுகாக்கும் கம்யூனிஸ எதிர்ப்புவாதியாகவே இருந்தார்- இருப்பார் என்பதும் சர்வநிட்சயம். சிலர் முற்போக்கு முகாமைத்தரிப்பதாகக் கூறிக்கொண்டே முற்போக்காளர்களுடன் கலந்துரையாடி விடயத்தை தெரிந்துகொள்வதற்குப் பதிலாக - அந்த நிதானத்தையும் இழந்து பிரசாரம் செய்வதானது நேரடியாகப் பிற்போக்குமுகாமிற்கு இட்டுச்செல்லும் மார்க்கமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# திறந்துவிடப்பட்ட 'பேர்லின்' எல்லை.

- மோகன்

கிழக்கு, மேற்கு எனப் பிரிந்துகிடக்கும் ஜேர்மனிய கிழக்குப் பகுதியில் முன்னைய தலைநகராகிய 'பேர்லின்' நகரம் இருநாடுகளுக்குமாகப் பங்கிடப்பட்டு எல்லைபோடப்பட்டமை யாவரும் அறிந்ததே. 1949ம் ஆண்டிலிருந்து வெறும் முள்வேலியாகவேமாத்திரம் இருந்த இவ்வெல்லையானது பின்னர் மே.பேர்லினைச் சுற்றிய வகையில் 'சுவர்' ஆக எழுப்பப்பட்டது. 1961 ஓகஸ்ட் 13இல் கி.ஜேர்மன் தலைமையால் அறிவிக்கப்பட்டபடி உடன் சுவர் கட்டுவதற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டு 1961 நவம்பர் 29ல் முடிக்கப்பட்ட இச்சுவர் 167 கி.மீ .நீளமும், 4மீற்றர் உயரமும், 12 வாசல்களையும் கொண்டமைந்தது. இச்சுவர் எழும்பும் வேலையில் இருபதாயிரம்தொழிலாளர்கள் வரை ஈடுபட்டனர். 'சுவர்' அமைக்கப்பட்டவுடனேயே 79 பேர் இச்சுவரைக் கடந்து மே.பேர்லினுக்குள் நுழைய முனைந்தபோது உயிரிழந்தனர். மேலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ஆயினும் அவ்வப்போது பலர் பல வழிகளில்மே. பேர்லினுக்குள் புகுந்தே இருக்கின்றனர். கடந்த ஜனவரியிலும் 332 பேர் இச்சுவரைக்கடந்து மேற்குக்குள் புகுந்துள்ளனர்.

ஆனால், அண்மையில் ஆவணி, புரட்டாதி மாதங்களில் கி.ஜேர்மனியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தொகையினர் சுற்றுலாப் பிரயாணிகள் என்ற பெயரோடு கங்கேரி நாட்டுக்கு வந்து அங்கிருந்து ஆஸ்திரியா மூலம் மே.ஜேர்மனிக்குள் வந்து சேர்ந்துள்ளதும், இது 65ஆயிரம் வரை அதிகரித்ததும், மே.ஜேர்மன் அவர்களைத்தாராளமாக ஏற்றுக்கொண்டதும், இதனைத்தொடர்ந்து வந்த நிகழ்ச்சியாக கடந்த 9ந்திகதி(9.11.89) இரவு 9 மணிக்கு தற்போதைய கி.ஜேர்மன் அதிபர் திரு.எகொன் கிறென்ஸ் அவர்களினால் இவ்வெல்லை திறந்துவிடப்பட்டதும், இன்றைய நிகழ்வுகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிவிட்டது.

இச்சுவர் எழுப்பப்பட்டதற்கும், அதனைச் சிறையாக எண்ணி கி.ஜேர்மனின் குறிப்பிட்டளவு மக்கள் மேற்கினுள் நுழைவதற்கும், இன்று இச்சுவர் திறந்துவிடப்பட்டமைக்குமான காரணங்கள் பலமானவையாக அமைகின்றன.

www.tamilrangam.net

கிட்லரின் பாசிசப் போர்வெறியில் முழு ஐரோப்பாவுமே தத்தளித்துக்கொண்டிருந்த போது இரண்டாம் உலகமகாயுத்தம் ரஸ்யாவுக்கெதிராக ஜேர்மனியைத் தூண்டியது. 200 ஜேர்மனிய நாஜிப்படைப் பிரிவுகளை எதிர்த்து ரஸ்யா தனது போரை தொடங்கியது. இப்போரில் நேசநாடுகள் அணிசேர்ந்தன. பல கி.ஐரோப்பியநாடுகளை கிட்லரின் நாஜிப்படைகள் அடிமைப்படுத்திவைத்திருந்தன. ஸ்டாலின் தலைமையிலிருந்த ரஸ்யாவின் செஞ்சேனைப்படை தீரமாகப் போராடி ஜேர்மனியைத் தோற்கடித்தது. அதைத்தொடர்ந்து கிட்லரினால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த நாடுகள் விடுதலையடைந்தன. ,பாசிசப் போர்வெறியிலிருந்து உலகமக்களைக் காப்பாற்றிய ரஸ்ய தலைவர் ஸ்டாலினுடன்அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ற், பிரிட்டனின் வின்சன்ற்சேர்ச்சில்ஆகியோர் கூடியதையடுத்து ஜேர்மனி கிழக்கு மேற்காக இரண்டாகி சோவியத்தின்கீழ் கிழக்கும் அமெரிக்க, பிரிட்டனின் கீழ் மேற்கும் வந்தன. அப்போதே பேர்ளின் இரண்டாக்கப்பட்டது. கிழக்கு ஜேர்மன் சோவியத்தின் சமவுடமைப் பொருளாதார அமைப்பைக் கொண்டதாக மாற்றப்பட்டு சோசலிச அமைப்பில் கட்டிவளர்க்கப்பட்ட போது முதலாளித்துவ ஊடுருவல்கள், சி.ஐ.ஏ போன்ற ஏகாதிபத்திய உளவுத் தலையீடுகள் போன்றவற்றிலிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டியத்தார் தேவையின் அடிப்படையிலேயே பேர்ளின் எல்லைகள் பலப்படுத்தப்பட்டன.

எனினும் ஒரே இனமொழியைக் கொண்டிருந்த ஜேர்மன் மக்களைப் பிரித்தபோது உறவுமுறையானவர்கள் கூட கிழக்காகவும், மேற்காகவும் பிரியவேண்டியதாயிற்று என்றுமே அவர்களைக்காணமுடியாதா என்னும் ஏக்கத்திலே எல்லை கடக்கமுயன்று உயிரைப்பறி கொடுத்தவர்களின் பரிதாபக்கதைகள் ஏராளமாயின. இதுவே இச்சுவர் எழுப்பப்பட்டபோது அதனை தமது நிரந்தரச் சிறையாக கருத கி.ஜேர்மன் மக்களைத் தூண்டியது எனலாம். ஆயினும் அரசியல் படிமுறைவளர்ச்சியில் உளரீதியாக கி.ஜேர்மன் மக்கள் மேற்கின் கலாச்சார சீரழிவுகளையும், முதலாளித்துவ சுரண்டல் அமைப்பையும் வெறுத்தனர். கிழக்கிலிருந்து மேற்கில் தஞ்சம்புகுந்த பின்னர் மீளவும் கிழக்குக்குத் திரும்பியுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் மூலம் இதனைப்புரிந்துகொள்ளலாம்

இது இப்படியிருக்க, இந்நிகழ்ச்சியைவைத்துக்கொண்டு முதலாளித்துவ செய்திஸ்தாபனங்கள் ஒரு பக்கச்சார்பான செய்திகளையே பரப்புகின்றன. கம்யூனிசம் தோற்றுப்போனதாக கதைகட்டுகின்றன. கி.ஜேர்மனுக்கு சார்பாக பேட்டியளித்த எத்தனையோ மக்களின் பேட்டிகளை பிரசுரிக்காமல் விடுகின்றன, அல்லது இருட்டடிப்புசெய்துவிடுகின்றன. முதலாளித்துவ தலைமைகள் இதனை, அதாவது ,சுவர் திறக்கப்பட்டமையை மாபெரும் ஜனநாயக முயற்சி எனப்பாராட்டுவதால் இதுவரை கி.ஜேர்மன்நாட்டினை ஒரு சர்வாதிகார நாடாக இருந்ததாக திரிப்பதற்கு முயல்கின்றன. " இது ஜனநாயகத்தை நோக்கிய நடை" என்று அமெரிக்க அதிபர் திரு.ஜேர்ஜ் புஸ் சும் இது ஒரு சுதந்திரத்திற்கான பெரிய நாள் " என்று பிரிட்டன் பிரதமர் திருமதி மா

www.tamilrangam.net

கிரட் தட்சரும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கறுப்பர் இன ஒடுக்கல், ஆசிய இன மக்கள் ஒடுக்கல் போன்றவற்றையும் இன்னும் காலனித்துவங்களையும் வைத்திருக்கும் - அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்தியங்கள் 'ஜனநாயகம்' பேசுவது கவனிக்கத்தக்கது) தற்போதைய கி.ஜேர்மன் அதிபராகிய திரு.எகோன் கிறென்ஸ் அவர்கள் சுதந்திரமான தேர்தல், சுதந்திரமான மக்களின் கிழக்கு மேற்கான பயணம், பொருளாதார மேம்பாடு ஆகியவையே தமது இலட்சியங்கள் எனக்கூறி பதவியேற்றவுடன் அதன் முதற்படியாக எல்லை திறப்பினைச் செய்துள்ளார். விரைவில் தேர்தலையும் நாடு சந்திக்கவுள்ளது. ஆயினும் மேற்கத்தைய சீரழிவிலிருந்து நாட்டைக் காப்பாற்றவேண்டிய பாரிய பொறுப்பு இவருக்குள்ளது.

ஆரம்பத்தில் "கி.ஜேர்மன் மக்களை அகதிகளில் ஏற்கமாட்டோம், அதற்குரிய வசதிகள் இல்லை" என்று கூறிய மேற்கின் பிரதமர் திரு.கோல், பின்னர் எவ்வளவுபேர் என்றாலும் ஏற்போம் என அறிவித்ததைத் தொடர்ந்து எஸ்.பி.டி எனப்படும் சோசலிசக்கட்சி உறுப்பினரும், கவுனர் மேயருமான கெர்பேர்ட் மோன்ஸ்மேறக் என்பவர் "இப்பொழுது மட்டும் எப்படி வசதிவந்தது?" என்று பிரதமரைக் கேட்டதோடு "இனிவரும் கி.ஜேர்மன் மக்கள் வெறுப்பையும் வன்செயல்களையுமே இங்கிருந்து எதிர்நோக்க வேண்டியிருக்கும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு தலைமைகள் எதிர்பார்த்தபடி 'சுவர்' திறந்துவிடப்பட்டபின் கிழக்கிலிருந்து மக்கள் அதிகமாக வந்துவிடவில்லை. வந்தவர்களில் பலர் திரும்பிச் செல்கின்றனர், அல்லது வேடிக்கை பார்க்க வருகின்றனர். "எமது நாட்டில் எமக்கு எந்தவிதமான குறையுமில்லை நாம் எம்தாய் நாட்டைவிட்டுச் செல்லமாட்டோம்" என்கின்ற கிழக்கு ஜேர்மன் மக்களில் பலரது வாக்குமூலங்களையும் கேட்கக்கூடியதாகவுள்ளது.



www.tamilrangam.net

# ஒரு தலைவனின்

## நாளேட்டிலிருந்து....

அன்றொருநாள்,
அந்த வியட்நாம் வீதியில்
ஒரு மனிதன்
நடந்துகொண்டிருந்தான்,
அவன்முகத்தில்
கர்வம் இல்லை,
இதயத்தில்
கனம் இருந்தது.
அவன் தோற்றத்தில்
செழுமை இல்லை
எளிமை இருந்தது.
அவன் ஆடைகள்
வறுமையின் அடையாளமாய்...
அவன் கண்கள்
அறிவொளி வீசும்
விளக்காய்....
அவன் குறுந்தாடி
அநுபவ முத்திரையாய்..
தன் பணிக்காய்
பல மைல்கள்
நடந்த
அவன் கால்கள்
சோர்ந்தன,
பசியும்
அவன் உடலை
சாடியது.
கண்ணில்பட்ட
குடிசையில் கதவைத்
தட்டினான்



ஒரு மூதாட்டி
முன்வந்தாள்
பசிக்குதம்மா என்றான்
வா மகனே! என்றாள்
அவள் வசம் இருந்ததோ
பழைய கஞ்சியும் ரொட்டியும்தான்
பரிவுடன் பரிமாறினாள்
அதை அமுதெனப் புசித்தான்
அவள் பரிவு கண்டு,
அவன் கனிவு கொண்டான்
தன் நன்றிகளை
முத்தங்களாய் சொரிந்தான்
கடமை அவனை அழைத்தது
விடைபெற முனைந்தான்
அவன் விடைபெறும் வேளை
அவள் வினவினாள்..
'என் மகன் போலிருக்கும்
நீ யாரப்பா' என்று,
வியட்நாமின்
தாய்களுக்கெல்லாம்
நான் மகன்தானம்மா
நான் உங்கள்
'கோசிமின்' நானே"
என்றான் அமைதியாக.

-மாலி. நாகேல்-


www.tamilrangam.net

**சிறுகதை -**

# எரியும் இதயம்

## மக்சீம் கோர்க்கி

### கதைகளிலிருந்து...



''முன் ஒரு காலத்தில் ஓர் இனத்தவர் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய குடியிருப்புக்கு மூன்று புறத்திலும் கடக்க முடியாத அடர்ந்த காடு சூழ்ந்திருந்தது. நாலாவது திக்கில் ஸ்தெப்பி வெளி இருந்தது. அவர்கள் களிப்பும் குதூகலமுமானவர்கள், பலசாலிகள், துணிவுள்ளவர்கள். ஒரு நாள் அவர்களுக்குக் கெட்ட காலம் வந்து விட்டது. பகை இனத்தவர் எங்கிருந்தோ வந்து அவர்களைக் காட்டுக்குள் வெகு தூரம் விரட்டி விட்டார்கள். அங்கு ஒரே இருட்டும் சதுப்பு நிலமுமாக இருந்தது. ஏனென்றால் மரங்கள் நெடுங்காலத்தவை, அவற்றின் கிளைகள் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருந்தபடியால் வானம் புலப்படாதவாறு மறைத்தன. அவைகளின் அடர்ந்து தழைத்த இலைகளைக் கடந்து சூரிய கிரணங்கள் தரையில் பட முடியவில்லை. எப்போதாவது வெயில் தரையில் பட்டாலும் சதுப்பு நிலத்திலிருந்து கொடிய நாற்றம் கிளம்பியது. மக்கள் அதனால் மடிந்தார்கள். அப்போது இனத்துப் பெண்டிரும் குழந்தைகளும் அழுது புலம்பினார்கள், ஆண்கள் சிந்தனையில் ஆழ்ந்து துயரமடைந்தார்கள். காட்டை விட்டு வெளியேற வேண்டியது அவசியமாயிருந்தது. அதற்கு இரண்டு வழிகள்தான் இருந்தன: ஒன்று திரும்பிப் போகலாம், ஆனால் அங்கே வலிமை மிக்க கொடிய பகைவர்கள் இருந்தார்கள்; இரண்டாவது, முன்னே போகலாம், ஆனால் அங்கே ராட்சத மரங்கள் விசாலமான கிளைகளால் ஒன்றையொன்று தழுவிப் பிணைந்தவாறு சதுப்பு நிலத்தில் முடிச்சு வேர்களை ஆழ ஊன்றி உறுதியாய் நின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இந்தக் கல்போன்ற மரங்கள் பகல்போதின் மங்கிய கருக்கலில் மௌனமாக அசையாமல் நின்றன. இரவு நேரத்தில் மக்கள் நெருப்பு மூட்டியதுமோ, அவை இன்னும் நெருக்கமாக அவர்களைச் சூழ்ந்து குமைந்தன. இரவும் பகலும், எப்போதும், இந்த மக்களைச் சுற்றியிருந்தது காரிருள் வளையம், அவர்களை நசுக்க முயல்வது போல. அவர்களோ, விசாலமான ஸ்தெப்பி வெளியில் வாழ்ந்து பழகியவர்கள். மரங்களின் உச்சி மீது காற்று வீசும் போதோ, இன்னும் பயங்கரமாக இருக்கும். அப்போது காடு முழுவதும் அவர்களது மரண கீதம் போன்ற இம்மெனும் ஒலியால் நிறைந்துவிடும். இந்த மக்கள் வலியவர்கள். தங்களைத் தோற்கடித்தவர்களுக்கு எதிராகப் போரிட இவர்களால் முடியும். ஆனால் அவர்கள் சண்டையில் உயிர் துறப்பதற்குத் துணியவில்லை. ஏனெனில் வழிவழி வந்த மரபுகளை அவர்கள் பாதுகாக்க வேண்டியிருந்தது. அவர்கள் கொல்லப்பட்டால் அவர்களது மரபுகளும் மாய்ந்துவிடும். ஆகவே, அவர்கள் காட்டின் இரைச்சலுக்கும் சதுப்பு நிலத்தின் நாற்றத்துக்கும் நடுவே உட்கார்ந்து நீண்ட இரவு முழுவதும் கவலை நிறைந்த எண்ணங்களில் ஆழ்ந்திருந்தார்கள். அவர்கள் உட்கார்ந்திருக்கையில் கணப்பு நெருப்பினால் ஏற்பட்ட நிழல்கள் அவர்களைச் சுற்றிலும் ஓசையின்றித் தத்திக் குதிக்கும். அவ்வாறு குதித்தாடுபவை நிழல்கள் அல்ல, காட்டையும் சதுப்பு நிலத்தையும் சேர்ந்த தீய ஆவிகள் தங்கள் வெற்றியைக் கொண்டாடுகின்றன என்று தோன்றும்... ஆக, இந்த மக்கள் உட்கார்ந்து சிந்தித்தார்கள். ஆனால் துன்ப எண்ணங்கள் மனிதர்களின் உடல்களையும் உள்ளங்களையும் நலிவிப்பது போல, கடும் உழைப்போ, பெண்களோ, வேறு எதுவுமோ நலிவிக்க முடியாது. ஓயாச் சிந்தனையால் நலிந்து போனார்கள் இம்மக்கள்... அவர்களிடையே அச்சம் பிறந்தது, அவர்களது திண்ணிய கரங்களைப் பிணைத்தது. நாற்றத்தினால் இறந்தவர்களுடைய உடல்களின் அருகிலும், பிழைத்திருந்தவர்களின் தலைவிதியை எண்ணியும் அழுது அரற்றிய மாதர் பயங்கரத்தை விளைத்தார்கள். கோழைத்தனம் நிறைந்த சொற்கள், ஆரம்பத்தில் மெதுவாகவும் பயத்துடனும், பின்பு வர வர மேலும் உரக்கவும் காட்டிலே கேட்கலாயின... பகைவர்களிடம் சென்று தங்கள் விடுதலையை அவர்களுக்கு வழங்கிவிட மக்கள் ஆயத்தமாகி விட்டார்கள். இறப்பை எண்ணி எல்லோருமே திகில் கொண்டனர். அடிமை வாழ்வைப் பற்றியோ, ஒருவராவது அஞ்சவில்லை... அந்தச் சமயத்திலே தான்கோ முன்வந்து தன்னந் தனியே அவர்கள் அனைவரையும் காப்பாற்றினான்.''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

''இளமையும் அழகும் உள்ளவன் தான்கோ. அழகர்கள் எப்போதுமே துணிவு மிகுந்தவர்கள். ஆக, நான்கோ அவர்களிடம், தன் தோழர்களிடம், சொன்னான்:

'' 'சிந்தனையால் மட்டும் பாறையை வழியிலிருந்து அப்புறப்படுத்த முடியாது. ஒன்றும் செய்யாதவர்கள் ஒன்றையுப் சாதிக்க இயலாது. சிந்தனையிலும் கவலைப்படுவதிலும் எதற்காக நாம் சக்தியை வீணாக்குகிறோம்? எழுங்கள்! காட்டினுள் வழி செய்து கொண்டு முன்னேறுவோம். காட்டிற்கு முடிவு இருக்கத்தானே வேண்டும்! உலகில் எதற்கும் முடிவு உண்டல்லவா? போவோம்! ஊம், கிளம்புங்கள்!'

''அவர்கள் அவனை நிமிர்ந்து பார்த்தார்கள். பெருவலிவும் உயிர்த் தழலும் அவன் விழிகளில் சுடர்வதைக் கண்டு அவன் தங்கள் யாவரிலும் சிறந்தவன் என்று தெரிந்து கொண்டார்கள்.

'' 'எங்களை நடத்திச் செல்!' என்றார்கள்.

''தான்கோ அவர்களை நடத்திச் சென்றான். எல்லோரும் ஒன்றாக அவனைப் பின்தொடர்ந்தார்கள், அவனை நம்பினார்கள். கஷ்டமாயிருந்தது வழி! ஒரே இருட்டு. ஒவ்வோர் அடியிலும் சதுப்பு நிலம் தனது பேராசை பிடித்த சேற்று வாயைத் திறந்து மக்களை விழுங்கியது. மரங்கள் திண்ணிய சுவர் போன்று அவர்களது வழியைத் தடுத்தன. அவற்றின் கிளைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இருந்தன, வேர்கள் எல்லாப் பக்கங்களிலும் பாம்புகள்போல நீண்டு சென்றிருந்தன. ஒவ்வோர் அடி முன்னேறுவதற்கும் இந்த மக்கள் குருதியும் வியர்வையும் பெருமளவு செலுத்த வேண்டியிருந்தது. நெடு நேரம் நடந்தார்கள்... காடு மேலும் மேலும் அடர்த்தியாயிற்று. அவர்களது வலிமையோ குறைந்து கொண்டு போயிற்று! அவர்கள் தான்கோவைக் குறைகூறலானார்கள் —அவன் இளைஞன், அனுபவமற்றவன், எங்கேயோ இட்டுச் செல்கிறான் என்று. அவனோ, ஊக்கமும் உள்ளத் தெளிவும் துலங்க முன்னே நடந்தான்.

''ஒரு நாள் காட்டுக்கு மேலே புயல் வீசியது. மரங்கள் கசமுசவென்று பயங்கரமாகச் சிலுசிலுத்தன. காடு எங்கும் செறிந்து மண்டியது காரிருள். உலகு தோன்றிய நாள் முதல் உண்டான இரவுகள் எல்லாம் ஒன்று திரண்டு அங்கே குழுமிவிட்டன போலிருந்தது. இராட்சத மரங்களுக்கு இடையே, இடியின் கொடு முழக்கத்துக்கு நடுவே நடந்தார்கள் சிறு மனிதர்கள். அவர்கள் நடக்கையில் அரக்க மரங்கள் சீற்றத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

துடன் கடகடத்தன, சீழ்க்கை அடித்தன; மரங்களின் உச்சிகள் மீது வெட்டி வெட்டியடித்த மின்னல்கள், வறண்ட நீல ஒளியால் காட்டைப் பளிச்சிடச் செய்வதும், அதே விரைவுடன் மறைந்து விடுவதுமாக மக்களை வெருட்டின. வறண்ட மின் வெட்டுக்களால் ஒளிபெற்ற மரங்கள் உயிருள்ளவை போன்றும், தங்களது இருட் சிறையிலிருந்து மக்கள் தப்பி விடாதபடித் தடுக்க, அவர்களை வழி மறிக்க, தங்கள் கரடு தட்டிய நீண்ட கரங்களை விரித்து, அவர்களைச் சுற்றிலும் வலைப்பின்னல் போலக் கோத்துப் பிணைத்துக் கொண்டிருப்பவை போன்றும் காட்சியளித்தன. கிளைகளின் இருளிலிருந்து அச்சந்தருவதும், கருண்டதும், வறண்டதுமான ஏதோ ஒன்று அவர்களை உறுத்து நோக்கியது. கடினமான வழி. அதில் நடந்து களைத்துத் தளர்ந்த மக்கள் உளம் சோர்ந்தார்கள். தங்கள் பலவீனத்தை ஒப்புக்கொள்ள அவர்களுக்கு வெட்கமாய் இருந்த படியால் தங்களுக்கு முன்னே நடந்த தான்கோ மேல் தங்கள் ஆத்திரத்தையும் சீற்றத்தையும் பொழியலானார்கள். அவன் தங்களை நடத்திச் செல்லத் திறமை அற்றவன் என்று குறைகூறினார்கள். எப்படியிருக்கிறது சேதி? ஊம்?

''நடப்பதை நிறுத்தி விட்டு, காட்டின் அவல இரைச்சலுக்கிடையே, நடுங்கும் இருளின் நடுவே, அலுப்பும் சினமும் மேலெழ நின்று, தான்கோவை நிந்திக்கலானார்கள்.

'' 'நீ எங்களுக்கு அழிவும் கேடும் விளைப்பவன்! எங்களை நடத்தி வந்து சோர்வடையச் செய்து விட்டாய். இதற்குத் தண்டனையாக உன் உயிரை வாங்கப் போகிறோம்' என்றார்கள்.

''தான்கோ அவர்களை நேரிட நோக்கி, 'நடத்திச் செல்! என்று சொன்னீர்கள், நான் நடத்தி வந்தேன். நடத்திச் செல்ல எனக்குத் துணிவு இருந்தது, அதனால்தான் நடத்தி வந்தேன்! நீங்களோ? உங்கள் தரப்பில் நீங்கள் என்ன செய்தீர்கள்? நீங்கள் வெறுமே நடந்தீர்களே தவிர, நீண்ட வழிநடைக்கு வேண்டிய பலத்தைத் திரட்டிக் கொள்ளவில்லை. நடக்க மாத்திரமே செய்தீர்கள், அதுவும் ஆட்டு மந்தை போல!' என்று கர்ஜித்தான்.

''ஆனால் அவனது சொற்கள் அவர்களது ஆத்திரத்தை இன்னும் தூண்டி விட்டன.

'' 'உன்னைக் கொல்வோம்! கொன்று விடுவோம்!' என்று ஆர்ப்பரித்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

''காடு சீழ்க்கையும் சீறலுமாக அவர்களது கூச்சலை எதிரொலித்தது. மின்னல்கள் இருளைத் தாராகக் கிழித்தன. எவர்களுக்காக உழைத்தானே அவர்களை நோட்டமிட்ட தான்கோ, அவர்கள் காட்டு விலங்குகள் போல் தோற்றமளிப்பதைக் கண்ணுற்ருன். அவனைச் சூழ்ந்து மொய்த்தார்கள் அவர்கள். ஒருவர் முகத்திலாவது அருள் இல்லை. அவர்களிடம் இரக்கத்தை எதிர்பார்க்கவே முடியாது என்பதைக் கண்டான் தான்கோ. அப்போது அவன் உள்ளத்தில் மண்டி எழுந்தது சீற்றம். இருந்தாலும் இந்த மனிதர்கள் மேல் உண்டான இரக்கத்தால் அதை அடக்கிக் கொண்டான். இந்த மக்களை அவன் நேசித்தான். தான் இல்லாவிட்டால் அவர்கள் மடிந்து ஒழிவார்கள் என்று எண்ணினன். ஆகவே, அவர்களைக் காப்பாற்றும் விருப்பம், அவர்களைச் சுலபமான வழியில் நடத்திச் செல்லும் ஆசை அவன் நெஞ்சில் தழலாய் மூண்டெரிந்தது. இந்த வன் தழலின் ஒளி அவன் விழிகளில் சுடர்ந்தது... இதைக் கண்ட அவர்கள், அவன் ஆத்திரம் அடைந்திருப்பதாகவும் அதனுல்தான் அவன் கண்கள் அவ்வளவு பிரகாசமாக அனல் வீசுவதாகவும் எண்ணி, அவன் தங்களைத் தாக்குவான் என்று எதிர்பார்த்து ஓநாய்கள் போல எச்சரிக்கையுடன், கூட்டமாக அவனைச் சூழ்ந்து நெருங்கினர்கள்—அப்போதுதான் அவனைப் பிடித்துக் கொல்வது எளிதாயிருக்கும் என்ற எண்ணத்தில். தான்கோ அவர்களுடைய நினைப்பைப் புரிந்து கொண்டான். அந்த நினைப்பு அவனுக்கு வருத்தம் ஊட்டியது. அதனுல் அவன் இதயம் முன்னிலும் அதிக ஒளியுடன் மூண்டெரிந்தது.

''காடு சோககீதத்தைத் தொடர்ந்து இசைத்தது. இடி முழங்கி அதிர்ந்தது, மழை கொட்டியது...

'' 'இந்த மக்களுக்காக நான் என்ன செய்வது?' என்று இடி முழக்கத்தை விஞ்சும் குரலில் கர்ஜித்தான் தான்கோ.

''திடீரென்று அவன் கைகளால் தனது நெஞ்சைக் கிழித்து, அதற்குள்ளிருந்து இதயத்தைப் பிய்த்து எடுத்துத் தலைக்கு மேலே உயர்த்தினன்.

''அது சூரியன் போல, அதையும் விட அதிகமாக, ஒளி வீசிற்று. மாந்தர்கள் மீது உண்டான பேரன்பு என்னும் இந்தத் தீப்பந்தத்தால் பிரகாசமடைந்த காடு அனைத்தும் நிசப்தமாகி விட்டது. ஒளியைக் கண்டு ஓட்டமெடுத்த இருள், காட்டினுள் நெடுந் தொலைவில் நடு நடுங்கி, சதுப்பு நிலத்தின் நாற்றக் குழம்பலில் விழுந்தது. வியப்பினுல் கல்லாய்ச் சமைந்து விட்டார்கள் மக்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

''தான்கோ, 'போகலாம் வாருங்கள்!' என்று கூறி, தனது எரியும் இதயத்தைத் தூக்கிப் பிடித்தவாறு, வழியில் வெளிச்சம் காட்டிக் கொண்டு முன்னே பாய்ந்து சென்றான்.

''மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல அவர்கள் அவன் பின்னே நடந்தார்கள். அப்போது காடு முன்போலவே ஆரவாரம் செய்தது. மரங்களின் உச்சிகள் வியப்புடன் அசைந்தாடின. ஆனால் ஓடும் மக்களின் அடியோசை, கானகத்தின் அரவத்தை அடக்கி விட்டது. எரியும் இதயத்தின் அற்புதக் காட்சியால் கவரப்பட்டு அனைவரும் விரைவாகவும் துணிவுடனும் ஓடினார்கள். இப்போதும் பலர் மடிந்தார்கள், ஆனால் முணுமுணுப்போ கண்ணீரோ இன்றி மடிந்தார்கள். தான்கோ இடை விடாது முன்னே சென்ற வண்ணமாயிருந்தான். அவன் இதயம் எரிந்த வண்ணமாயிருந்தது!

''திடீரென்று கானகம் அவர்களுக்கு முன்னே விலகி வழி விட்டது. வழிவிட்டு விட்டு, அடர்வும் மௌனமுமாகப் பின் தங்கி விட்டது. தான்கோவும் மற்றவர்களும் வெயிலொளியும் மழையால் கழுவப்பட்ட தூய காற்றும் நிறைந்த இன்பக் கடலில் திடீரென மூழ்கித் திளைத்தார்கள். அவர்களுக்குப் பின்னே காட்டுக்கு மேலே புயல் வீசியது. ஆனால் இங்கேயோ பளிச்சென்று வெயில் அடித்தது. ஸ்தெப்பி வெளி உயிர்த்தது, புற்கள் மேல் மழைத்துளிகள் வைர டால் அடித்தன, ஆறு தங்கப் பாளம் போல மின்னியது... மாலை ஆகி விட்டது. மறையும் ஞாயிற்றின் கதிர்களைப் பிரதிபலித்த ஆறு, தான்கோவின் பிளந்த மார்பிலிருந்து கொதிக்கும் அருவியாய்ப் பொழிந்த குருதிபோன்று செக்கச் செவேலெனக் காட்சியளித்தது.

''தனக்கு முன்னே பரந்து கிடந்த ஸ்தெப்பி வெளி மீது கண்ணோட்டினான் கர்வமும் துணிவும் திகழும் தான்கோ. சுதந்திர பூமியை மகிழ்வுடன் நோக்கி, கர்வம் பொங்க வாய் விட்டுச் சிரித்தான். பின்பு தரையில் விழுந்து இறந்து போனான்.

''உவகை மீதூர, நம்பிக்கை ஊற்றெடுக்க நின்ற மக்கள் அவன் இறந்ததைக் கவனிக்கவில்லை, தான்கோவின் உடலின் அருகே அவனுடைய துணிவு மிக்க இதயம் இன்னும் எரிந்து கொண்டிருப்பதையும் பார்க்கவில்லை. எச்சரிப்புள்ள ஒருவன் மட்டுமே இதைக் கவனித்தான். எதனாலோ அரண்டுபோய் அவன் கர்வம் ததும்பும் அவ்விதயத்தை மிதித்தான்... அது படபடவென்ப் பொறிகளைச் சிதறிவிட்டு அணைந்து போயிற்று...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இலங்கையிலிருந்து

# இந்தியப்படை வெளியேறுமா?

- மணிவண்ணன்.

இலங்கைத் தீவில் இந்திய ராணுவ மானது நிலையெடுத்து இருபத்தியேழுமாதங்கள் பூர்த்தியாகிவிட்டன. இரண்டாவது வருடம் பூர்த்தியாகிக் கொண்டிருந்தவேளை இந்தியப்படை வெளியேற்றம் சம்பந்தமாக- இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸவினது சற்று கடுமையான நிலைப்பாடு இலங்கை அரசியலில் குறிப்பாக வடக்குக்கிழக்கில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் எதிர்பார்த்தபடி எதுவும் நடந்தேறிவிடவில்லை.

இப்போது மீண்டும்.... நட்புறவு ஒப்பந்தம்...அமைதிப்படை டிசம்பர் முப்பதியொன்றுக்குள் வெளியேற்றம்...எனப் பரவலான கருத்துக்கள் அடிபடுகின்றன. ஆனால்....?

இலங்கையில் இந்திய ராணுவத் தலையீட்டிற்கு, தமிழ்ப் போராளிக்குழுக்களின் பலவீனம், இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் தந்திரோபாய அணுகுமுறை, இந்திய உளவுப்படையான ரோவின் ராஜதந்திரம் எனப்பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்பட்டபோதும் இந்திய உளவுப் படையின் ராஜதந்திரமே வலுவான ஊகமாக அமைகின்றது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில்சர்வதேச அரங்கில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணிசேராக் கொள்கை....உலகின் சிறந்த ஜனநாயகநாடு எனப் புகழாரங்களைச் சூடிக் கொண்டபோதும் தனதுஉள்நாட்டு விவகாரங்களில் மிகமோசமான ஒடுக்குமுறைத்தன்மை, தன் அயல் நாட்டுவிவகாரங்களில் 'ஆக்கிரமிப்பு' என்ற கண்டனத்துக்குள்ளாகவே செய்கிறது. இந்த வகையில் தனது பாதுகாப்புகருதி இலங்கைத்தீவையும் தனது கட்டுப்பாட்டில்வைத்திருக்கும் எண்ணத்தின் வெளிப்பாடே இலங்கையில் இந்தியப்படையின் இருப்பு எனக் கருதப்படுகிறது.

இலங்கை அரசியலில் மாறி மாறிப் பதவிக்கு வரும் யு. என். பி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி என்பவைகளில் சிறீலங்காசுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் எப்போதும் இலங்கை தனக்கு நட்பு நாடாகவேஇருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கும் என இந்தியா உறுதியாக நம்புகிறது, ஆனால், யு.என்.பி ஆட்சிக் காலச் செயற்பாடுகள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகவே அமைகின்றன. யு.என்.பி ஆட்சிக்காலத்தில் இலங்கைநாடானது இந்திய எதிர்ப்புசக்திகளின் - கேந்திரவலயமாகவே பாவிக்கப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கையிலுள்ள முஸ்லீம் மக்களினதும், தமிழ், சிங்கள, இடதுசாரிகளினதும் பலத்த எதிர்ப்புக்களின் மத்தியிலும் இஸ்ரேலுக்கான தூதகமொன்றினை அமைத்துக் கொள்ள அனுமதித்தமை, மற்றும் இஸ்ரேலிய மொசாட், பாகிஸ்தானிய கொமான்டோக்களை ஆயுதப்பயிற்சி என்ற போர்வையில் - நாட்டிற்குள் அனுமதித்தமை, ஏற்கனவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தைச் சங்கிலித் தொடர்போல் தனது கப்பற்படைத் தளத்தினால், சுற்றிவளைத்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய வல்லரசுக்கு மேலும்ஒரு தளம் அமைப்பதற்கான வழிகளைத் திறந்து விட்டமையென்பன இந்தியாவுக்கு மாத்திரமல்லமுழு ஆசிய, தென்கிழக்காசிய பிரதேசத்தின்பாது காப்புக்கும் மாபெரும் அச்சுறுத்தல்களாக-வே அமைந்தன. எனவே தனது வெளியுறவுக் கொள்கையில் சோசலிச முகாமான சோவியத் சார்பைக் கடைப்பிடிக்கும் இந்தியாவுக்கு ஏகாதிபத்திய வல்லரசான அமெரிக்காவையும் அதன் ஏஜன்டுகளையும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் முக்கிய மையமாக விளங்கும் இலங்கையில் நிலைகொள்ளவிடாது தடுக்கும் அவசியமேற்பட்டது. இதற்குரிய சந்தர்ப்பத்தையது எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தது.

இலங்கைத்தீவில் தமிழ்மக்கள் மீதான அரசின் இனஒடுக்கல், இதன் காரணமாக தமிழ்மக்களின்மத்தியில் எழுந்து கொண்டிருந்த போராட்ட அலை என்பவற்றை, யு.என்.பி அரசை தனது வழிக்குக் கொண்டு வருவதற்குரிய மார்க்கமாக இந்தியாமிகவும் சாமர்த்தியமாகப்பயன் படுத்திக் கொண்டது. எழுபதுகளின் ஆரம்பத்தில்சிறு சிறு குழுக்களாக ஆரம்பித்த தமிழர்குழுக்களை சகல உதவிகளையும் கொடுத்து - வளர்த்தெடுத்து அதன்மூலம் யு.என்.பிஅரசுக்கு நெருக்கடியைக் கொடுத்துக்கொண்டிருந்தது இந்தியா. தமிழ்க்குழுக்கள் 'தனிநாடு' பிரிவினை நோக்கமாகக் கொண்டிருந்தபோதும் இந்தியாவுக்கு நாட்டைத் துண்டாடும் நோக்கமில்லை. இலங்கையை கூறுபோடுவது இந்தியாவுக்கு பாதகமான சூழ்நிலையையே தோற்றுவிக்கும்.

தமிழ்குழுக்களின் பலவீனம்ஒருபுறம் தமிழ்குழுக்கள் மீதான சந்தேகம் ஒருபுறம், அதேவேளை இலங்கை அரசின் எல்லைமீறிய செயற்பாடுகள் என்பன இந்தியாவை இலங்கைமீதான உடனடி நடவடிக்கைக்குத் தூண்டியதெனலாம். இதன் விளைவே இந்தியப்படை வருகையும் இலங்கை இந்திய ஒப்பந்தமும் எனக்கூறிக்கமுடிகிறது.

இலங்கை இராணுவம் வடமராட்சித்தாக்குதலோடு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தவேளை தருணம் பார்த்து - தமிழ்மக்களுக்கு உதவி என்ற போர்வை-யில் இந்திய ராணுவம் இலங்கையில் புகுந்து கொண்டது.

இந்தியாவைப் பொறுத்தவரையில்

www.tamilrangam.net

தமிழ் மக்களின் பாதுகாப்பு என்ற கூறிக்கொண்டு இலங்கையினுள் நுழைந்த போதும் தமிழ்மக்கள் பற்றி அதிகம் அக்கறைகொண்டதாக இல்லை. இலங்கை இந்திய ஒப்பந்தம் கூட இந்திய நாட்டின் பாதுகாப்புகருதி ஏற்படுத்தப்பட்டதொன்றே தவிர வேறொன்றும் இல்லை. ஒப்பந்தத்தின் சாராம்சத்தை அலசிப்பார்ப்பவர்களுக்கு உண்மை விளங்கும்.

ஆனால், தமிழ்மக்கள் காலங்காலமாக எதிர்பார்த்திருந்த இந்தியப்படையின் வருகையை மிகவும் உற்சாகத்தோடு வரவேற்றனர். தாம் அனுபவித்து வந்த துன்பங்களுக்கெல்லாம் விடிவு கிட்டியதுபோல மகிழ்ந்திருந்தனர். அனைத்து விடுதலை இயக்கங்களும் கூட இந்தியப்படையின் வருகையை ஆதரித்தன. ஒப்பந்தப்படி ஆயுத ஒப்படைப்பு நிகழ்வுகளும் ஓரளவுக்கு நடந்தேறின. ஆனால் தமிழ் மக்களின் மகிழ்ச்சி - ஆரவாரமெல்லாம் நீண்டநாட்களுக்கு நீடித்திருக்கவில்லை. புலிகள் அமைதிப்படை - மோதலுடன் பழைய நிலையைவிட மோசமான நிலைக்குத்தள்ளப்பட்டனர்.

புலிகள்-இந்தியப்படை மோதலுக்கு, தொடர்ந்து கொண்டிருந்த சிங்களக்குடியேற்றங்கள் புலிகளின் முக்கிய பன்னிரெண்டு போராளிகளின் மரணம் முக்கியமுக்கிய காரணங்களாக முன்வைக்கப்பட்டபோதும், வடக்குக்கிழக்கு இடைக்கால நிர்வாக சபையில் புலிகள் கோரியிருந்தபடியே முழுஆசனங்களையும் அவர்களுக்கு ஒதுக்கியிருந்தால் யுத்தமும், உயிர் உடமை அழிப்புக்களும் தவிர்க்கப்பட்டிருக்கலாம் எனஅரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் கருத்து நிலவுகின்றது.

எது எப்படியோ அனைத்தும் நடந்தேறி பின் வடக்கு-கிழக்கு இணைப்புதேர்தல்கள் என்பனவும் நடந்துமுடிந்தன. இந்திய ராணுவத்தின் உதவியோடு தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வடக்குக்கிழக்குக்கு தனியான அரசொன்றும் நிறுவப்பட்டது

காலங்காலமாக இந்தியா பற்றிய கனவுகளுடன்மிதந்து கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு யுத்தத்தின்போது இந்தியராணுவத்தினரது அட்டூழியங்கள் தாங்கமுடியாத வலியையும் பலத்த ஏமாற்றத்தையும் கொடுத்தது. இந்திய ராணுவத்தின் மேல் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு இந்திய ஆதரவு இயக்கங்களின் மீதும் தாவியது. இத்தோடு வடக்குகிழக்கில் பதவிக்குவந்த இயக்கங்களும் 'தற்காப்பு' என்றபோர்வையில் மிக மோசமான பழிவாங்கல்களையே தொடர்ந்தன. இதன் வெளிப்பாடுகளைநடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல்கள் மூலம் தமிழ்மக்கள் ஓரளவுக்கு வெளிக்காட்டியிருந்தனர்.

தென்னிலங்கைப்பகுதியில் ஜே.வி.பியினால் உருவாக்கப்பட்ட இந்திய எதிர்ப்பு அலை உச்ச நிலையை அடைந்திருக்கிறது. ஜேவிபியின் இந்திய எதிர்ப்புக்கோசமானது புதிய கோசமல்ல. ஜே.வி.பியினது ஆரம்பகாலமுதலே இந்திய எதிர்ப்பு சக்தியாகவே திகழ்ந்துவருகின்றது. எண்பதுகளின் பின் பகுதியில் ஜே.வி.பியினால் முடுக்கிவிடப்பட்ட 'அரசகவிழ்ப்பு' முயற்சிக்கு இந்திய எதிர்ப்பு வாதத்தை முக்கிய கருவியாகப்பயன்படுத்துகின்றது. தென்னிலங்கைப்பகுதியில் ஏற்கனவே விதைக்கப்பட்டிருந்த இந்திய எதிர்ப்பு வாதம் ஜே.வி.பியிற்கு மிகவும் சாதகமாக அமைந்திருக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

இந்திய அரசானது தமிழ் மக்களின் பிரச்சனையையோ அல்லது சிங்களமக்களின் பிரச்சனையோ பற்றி அக்கறை கொள்ளவில்லை. தனது பாதுகாப்பே முக்கியநோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது என்பது வெளிப்படை. அதற்காகதமிழ் சிங்கள மக்களிடையே தோற்றுவிக்கப்பட்டிருந்த இனமுரண்பாட்டைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறது.

இன்றைய நிலையில் நீண்டகாலத்திற்குமுன்பே திட்டமிட்டுச் செயற்பட்டு வரும் இந்தியா நிறைய இழப்புக்களையும் அவமானங்களையும் சுமந்து கொண்டு தனதுபாதுகாப்பு நோக்கமும் உறுதிப்படுத்தப்படாதபோது இலங்கைத்தீவைவிட்டு வெளியேறுமா என்பது கேள்விக்குறியே. எனினும் இலங்கைத்தீவின் அதிகளவு மக்கள் இந்தியப்படையின் இருப்பை எதிர்க்கும் பட்சத்தில் படை வாபஸ் பெற்றுத்தான் ஆகவேண்டியிருக்கும்.

தென்னிலங்கைப் பகுதியில் நிலைமை மோசமாகவே உள்ளது. ஜே.வி.பி யின் பாசிசக்கரங்களுக்குப் பலியாகும் மக்களின் தொகை அதிகரித்துக்கொண்டே போகின்றது. யு.என்.பி. அரசும் வெளிப்படையாக அல்லாவிட்டாலும் மறைமுகமாகவேனும் தனது இந்திய எதிர்ப்புத்தன்மையை வெளிக்காட்டிக்கொண்டே இருக்கிறது. இடதுசாரிக்கட்சிகளும் ஆரம்பத்தில் இருந்ததைவிட தற்போதைய தமது நிலைப்பாட்டில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. ஜே.வி.பி யின் பயமுறுத்தல்காரணமாக இருக்கலாம். மொத்தத்தில் தென்னிலங்கை மக்கள் இலங்கையில் இந்தியப்படையின் இருப்பை முற்றாகவே எதிர்க்கிறார்கள் என்ற முடிவுக்குவரலாம்.

வடக்குகிழக்கை பொறுத்தவரையில் நிலைமை கொஞ்சம் மாறுதலாகவேஉள்ளது. இந்தியப்படையும் மக்களின் நன்மதிப்பைப்பெற தீவிரமாக முயன்றுவருகிறது. கிழக்கிலங்கை மக்கள் பெரும்பாலும் இந்தியப்படையின் இருப்பே தமக்குப்பாதுகாப்பு எனக்கருதுகின்றார்கள். முஸ்லீம் மக்களைப் பொறுத்தமட்டிலும் ஆரம்பத்தில் வைத்திருந்த இந்தியா இருந்தாலும் பாதுகாப்பில்லை, போனாலும் பாதுகாப்பில்லை என்ற நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. மேலும் பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களை வைத்திருக்கும் ஈரோஸ்சின் தற்போதைய நிலைப்பாடு இந்தியப்படையின் இருப்புக்கு அதிகவலு சேர்ப்பதாகவே அமைகின்றது. விடுதலைப்புலிகளும் அதன் ஆதரவாளர்களுமே இந்தியப்படையின் வெளியேற்றத்தை விரும்புகின்றனர்.

வடக்குகிழக்கு நிலைமைகளை வைத்துப்பார்க்குமிடத்து இந்தியப்படையின் உடனடி வெளியேற்றம் சாத்தியமற்றதாகவே தோன்றுகின்றது. இந்தியப்படை வெளியேறினும் அந்த இடத்தை நிரப்பப்போவது சிறிலங்காபடைகளே. சிறீலங்காப்படைகளில் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம் என தமிழ்மக்களின் ஒரு பகுதியினர் கேள்வி எழுப்புவதில் நியாயம் இல்லாமல் இல்லை.

www.tamilrangam.net

எது எப்படி இருந்தபோதும் ஒரு அந்நிய இராணுவம் இலங்கையில் நிலையெடுத்திருப்பதையும் அவர்களே சகலதையும் தீர்மானிக்கும் சக்திகளாக விளங்குவதையும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இது சகலவிதத்திலும் பலவீனப்பட்டிருக்கும் தமிழ் மக்களை சூன்யமான ஒரு எதிர்காலத்திற்கே இட்டுச்செல்லும். மொத்தத்தில் இந்தியா தனது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை இலங்கை இனப்பிரச்சனையை தனக்கு சாதகமாகவே பயன்படுத்திக்கொண்டிருக்கப்போகின்றது என்பதில் ஐயமில்லை.

இனமுரண்பாடானது நீடிக்கும்வரை இலங்கைத்தீவானது அந்நிய ஆக்கிரமிப்புக்கு சுலபமாகப் பலியாகிக் கொண்டே இருக்கும். இன்று இந்திய இராணுவம் வெளியேறினாலும் இன்னொரு அந்நிய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருக்கத்தான் போகிறது என்பதை கவனத்திற்கொள்ளவேண்டும். அதற்குரிய அமெரிக்க பின்னணிகள் இலங்கையில் நிறையவே செயற்படுகின்றன. ஒவ்வொரு வல்லரசுகளும் இனப்பிரச்சினையைச் சாதகமாகப்பயன்படுத்திக்கொண்டு இலங்கைமக்கள் மேல் சவாரிசெய்யப்போகின்றன.

தொடர்ந்தும் தமிழ்சிங்கள மக்களை இனவாதச் சேற்றுக்குள் மூழ்கவிடாது தடுத்துநிறுத்தி அவர்களை சரியான திசைவழிக்கு இட்டுச் செல்ல வேண்டியது தமிழ்சிங்கள முற்போக்கு சக்திகளின் உடனடிக் கடமையாகும். இன்றேல் அந்நியப்படைகளின் இருப்பு இலங்கைத்தீவிலும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.



www.tamilrangam.net

# ஜே.வி.பி படுகொலைகள்.

— இலங்கைக்கோன்.

இலங்கையில் 'ஜனதா விமுக்தி பெரமுன' என்ற ஜே.வி.பி யின் வரலாறு காணாதபயங்கரக் கொலை வெறியாட்டம் உச்சகட்டத்தை அடைந்துள்ளது. 1965வாக்கில் டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் யு.என்.பி அரசாங்கத்தால் உருவாக்கிவளர்த்துவிடப்பட்ட தத்துப்பிள்ளையான ஜே.வி.பியை யு.என்.பி அரசோ அடக்கமுடியாமல் திணறியடிக்கிறது. ஒரு மாதத்தில் ஐயாயிரம் மனித உயிர்கள் ஜே.வி.பியால் கொலை செய்யப்பட்டுள்ளன என்ற செய்தி மனிதநேசமுள்ள மக்கள்மத்தியில் பெரும் சவால்விட்டுக்கொண்டிருக்கிறது. 'துஷ்டனைத் துணைக்கழைத்தால் துன்பந்தான் முடிவு' என்பதை யு.என்.பி. அரசு உணரப்போவதில்லை. யு.என்.பி விதைத்த வினை ஜனநாயகரீதியாக இயங்கிய இடதுசாரி இயக்கங்களை பலவீனப்படுத்தியதோடு இப்போ நாட்டையே கொலைக்களமாக்கியுள்ளது. இந்த மிலேச்சத்தனத்தனமான, காட்டுமிராண்டித்தனமான கொலைகளை உடனேநிறுத்தி வைப்பதற்கான முதற்பணியில் தேசபக்தியுள்ள சகல மக்களும் குறிப்பாக அனைத்து முற்போக்குச் சக்திகளும் இறங்க வேண்டியது அவசியம்.

யு.என்.பி அரச இயந்திரமான ராணுவம்-பொலிஸ் 'தேடுதல் வேட்டையில்' இறங்கி நாடுபூராவும் புரிந்த அட்டூழியங்களை மக்கள் எப்பவோ கண்டு நிராகரித்துவிட்டார்கள்.' ராணுவம் பொலிஸ் இன்னொரு ஜே.வி.பி போன்று மிலேச்சத்தனமான கொலைகள் புரிவதையும் மக்கள் அவதானித்து வருகின்றனர். அதிகார வர்க்கத்தின் வெறியாட்டத்தில் யு.என்.பி.யும், ஜே.வி.பியும் ஒன்றையொன்று தோற்காதவகையில்செயல்பட்டுவருகிறன. இதனால் கொலைகளே மிச்சுகின்றன. வீதிகளில் பிணங்கள் நாறிக்கொண்டிருக்கின்றன. கடற்கரை ஓரங்களில் பிணங்கள் ஒதுங்குகின்றன. சின்னஞ்சிறுவர்கள் இவற்றையெல்லாம் வேடிக்கை பார்க்கிற அளவுக்கு அரசும் ஜே.வி.பியும் நாட்டையே பிணக்காடாக்கியுள்ளது.

இந்தக் கொலைபாதக வெறியாட்டம் உடனே நிறுத்தப்படவேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகள், பாட்டாளிகள் முற்போக்குச் சக்திகள், தமிழ் சிங்கள முஸ்லீம்மக்கள் இணைந்து நின்று இந்த நரபலியை நிறுத்த முன்வரவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முழுக்க முழுக்க அராஜக இயக்கமான இந்த ஜே.வி.பியும் 1971ல் சிறிமா தலைமையில் இருந்த கூட்டுமுன்னணி அரசுக்கெதிராகக் கலகக்கொடி தூக்கிய காலந்தொட்டு இன்றுவரை இந்த இயக்கம்பற்றி இலங்கையில் வரலாற்றுரீதியான மதிப்பீடு செய்யப்படாமையால் மக்களுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கூட்டுமுன்னணி அரசு கலகக்கொடி தூக்கிய ஜே.வி.பி.க்கு மன்னிப்பு வழங்கியதோடு கொலைபுரிந்தவர்களை நீதிமன்றத்தீர்ப்புக்குள்ளாக்கியதை 1977ல் வந்த யு.என்.பி அரசு நிராகரித்து வெளியே விட்டது. தனது அரசைப்பாதுகாக்கச் செய்யப்பட்ட இந்நடவடிக்கை இன்று யு.என்.பி ஆதரவாளர்களையே கொன்று தொலைப்பதை நேரிற்காண்கின்றது. யு.என்.பி. ஆதரவாளர்கள், இடதுசாரிகள் மட்டுமல்ல பொதுமக்களும் கொன்று குவிக்கப்படுகின்றார்கள்.

இந்தக் கொலைவெறிக்கும்பலான பாஸிஸ்டுக்களைத்தான் இலங்கையின் சகல முதலாளித்துவ பத்திரிகைகளும், ,பிரசாரசாதனங்களும், ஜே.வி.பி தான் உண்மையான கம்யூனிஸ இயக்கம் என்றும் ரோகண விஜவீரதான் உண்மையான கம்யூனிஸ்ட் என்றும் ஓய்வொழிச்சலின்றி வழக்கமான கம்யூனிஸ மார்க்ஸிஸ விரோதப்பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு இடதுசாரிகளை ஒழித்துக்கட்டக் கங்கணம்கட்டின. மார்க்ஸிஸ-கம்யூனிஸ விரோதிகள் அவ்வக்காலங்களில் காலத்துக்கேற்றவாறு கலகக்காரர்களையும் அராஜகவாதிகளையும் சிகப்புசட்டை அணியவிட்டு இப்படியெல்லாம் தலையில் தூக்கிவைத்து வேடிக்கைபார்ப்பதும் பிரசாரம் செய்வதும் ஒன்றும் தற்செயலான காரியம் அல்ல. இந்த பிரசாரகாறர் சி.ஐ.ஏ யினால் எப்படியெல்லாம் பழக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் புரியாத விடயம் அல்ல. ஆனால் ஐரோப்பாவில் மட்டுமல்ல, ஆசியாவிலும் மார்க்ஸிஸ கம்யூனிஸ விரோதம் சோவியத் விரோதம் என்று வந்து ஈற்றில் இந்திய விரோதமாக மாறி இன்று இலங்கையை எந்த முகாமுக்குள் கொண்டு சென்றுவிட்டது என்பதை நிதர்சனமாகவே பார்க்க முடிகின்றது. ஜே.வி.பியின் சோவியத் விரோதம் இந்திய விரோத-மாக மாறியதுபோல், அடுத்ததாக தமிழ் இனத்திற் விரோதமாகமாறும் அபாயம் உருவாகாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. இன்று நடக்கும்கொலைகள் தமிழ் இனத்தின்மீதும் கட்டவிழ்த்துவிடப்படலாம் என்ற பீதி பொதுவாகதமிழ் மக்களிடையே தலைதூக்கிவருவதையும் பார்க்கமுடிகின்றது.

யார் இந்த ரோகணவிஜவீரா?

'ஜனதா விமுக்தி பெரமுன' என்ற இந்த ஜே.வி.பி இயக்கம் என்பது என்ன?

www.tamilrangam.net

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியால் சோவியத் ரஸ்யாவில் உள்ள லுமும்பா பல்கலைக்கழகத்துக்கு கல்வி கற்க அனுப்பப்பட்ட ரோகணவிஜேவீர என்ற இளம் மாணவர், அங்குசென்றதும் சோவியத்ரஸ்யாவின் மிகப் பிரமாண்டமான வளர்ச்சியைக் கண்டு அதிர்ந்து போய் இலேசுக்கேயுள்ள பகுத்தாராயமிடுக்குடன் இங்கல்லவா கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள், இலங்கையில் உள்ள கம்யூனிஸ்டுகளைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை என்றெல்லாம் கிண்டல் செய்ததோடு தன்னைப்படிப்பிக்க அனுப்பிய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கே 'உபதேசம்' பண்ணப்போய் இடைநடுவில் படிப்புக்கும் முழுக்குப்போட்டுக் கொண்டு இலங்கைதிரும்பிய அவர் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். இதனை சரியாகப் பயன்படுத்திய யு.என்.பி டட்லி ஜே.ஆர் கும்பல் தங்கள் கம்யூனிச எதிர்ப்புப் பிரசாரமாக்கியது. அன்று தொட்டு இன்றுவரை ஜே.வி.பியும் முதலாளித்துவ சக்திகளைப் பலப்படுத்தும் பணியை நேர்த்தியாகசெய்துவருகின்றது. அதன் விளைவே இன்றைய கொலைகள், இவைையும் இந்த இயக்கத்தையும்தான் இலங்கையின் முதலாளித்துவப் பத்திரிகைகள் உண்மையான இயக்கவாதி என்று தலையில் தூக்கி வைத்துக்கொண்டாடின- கொண்டாடுகின்றன.

அரசியலுக்கும், கலைக்கும் இடையே ஐக்கியம் உண்டாக வேண்டும் என்று நாம் கோருகிறோம்; உருவத்திற்கும், உள்ளடக்கத்திற்கும் இடையே இணக்கம் இருக்கவேண்டும் என்று நாம் கோருகிறோம்; புரட்சிகரமான அரசியல் உள்ளடக்கமும், மிக உன்னதமான கலாம்ச ரூபமும் பக்குவமாகப் பிணைந்து இருக்க வேண்டும். கலாரீதியான குணம்சம் நிறைந்ததாயில்லாத கலை, இலக்கிய சிருஷ்டிகள், அவைகள் அரசியல் ரீதியாக எவ்வளவு முற்போக்கு வாய்ந்தவைகளாயிருந்தாலும் சரி, அவைகள் பிரயோஜனமற்றவைகளாகும்.

ஆகவே, தீங்கு விளைவிக்கும், பிற்போக்கு உள்ளடக்கம் நிறைந்த கலா சிருஷ்டிகளை மட்டும் நாம் வெறுக்கவில்லை; ''சுவரொட்டி விளம்பரம் மாதிரி-கோஷம்போடுவது போன்ற நடையிலுள்ள'' உள்ளடக்கம்தான் முக்கியம், உருவம் முக்கியமே இல்லை என்று வற்புறுத்தும் கலாசிருஷ்டிகளையும் நாங்கள் வெறுக்கிறோம். கலை இலக்கியப் பிரச்சினைகளில், இத்தகைய இரண்டு முனைகளிலும் நாம் போராட வேண்டும்.


— தோழர் மாவோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# ஏக்கம்



அந்த
ஆதவனின் கதிர்கள்
உறைந்து கிடக்கும் பனியை
முறித்துக் கொண்டு
வசந்தத்தை நினைவு கூருவது
போன்றதொரு உணர்வு–

புதிய – புதிய முகங்களுடன்
யார் யாரோ அவதரிக்க
காலங்களும் நகர
கண்ணில் தெரியும் ஜீவனும்
உள்ளிருக்கும் உயிரணுக்களும்
பறந்து செல்ல
நம் கொள்கைகளும் கோட்பாடுகளும்
சுயவுணர்வுகளும்
நம்முயிர்வாழ்தலுக்காக
முகமிழந்துபோக
எம்முறவுகளையெல்லாம்
ஓங்கியறைந்துவிட்ட
கொடுமை நிறைந்த
காலங்கள்–

வியாபாரமாகிப்போன
வாழ்க்கையில்
கனவுகள் பல சுமந்து
வசந்தங்களை விற்றுவிட்டு
சென்றுவிட்ட காலங்களுக்காக
கண்ணீரைச்சிந்திய விழிகள்
விரிந்த வானத்தினின்று
எதையோ தேடுகிறது.

– இரவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# செய்திகள்...

## இந்திய பொதுத்தேர்தல்

நவம்பர் 22ம் திகதி இந்தியாவின் ஒன்பதாவது பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. அஸ்ஸாம் தவிர்ந்த 24 மாநிலங்களிலும், 7 யூனியன் பிரதேசங்களிலும், மூன்று தினங்களாக இத்தேர்தல் நடைபெறும். அத்துடன் ஆந்திரம், கர்நாடகம், உத்திரபிரதேசம், கோவா, சிக்கிம் ஆகிய ஐந்து மாநிலங்களுக்குமான தேர்தல்களும் நடைபெறும். அத்தோடு இத்தேர்தல்களில் எட்டு மாநிலங்களைச் சேர்ந்த 11 சட்டசபைத் - தொகுதிகளுக்குமான இடைத்தேர்தலும் நடத்தப்படும். இத்தேர்தலில் மொத்தம் 49 கோடியே 80 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.. இவர்கள் 529 எம்.பிக்களை தெரிவு செய்ய உள்ளனர். இத்தேர்தலில் முதற்தடவையாக 18 வயது நிரம்பியவர்களும் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

இத்தேர்தலில் இந்திரா காங்கிரசைத் தோற்கடிப்பதற்காகவே மாநிலக்கட்சிகளான தி.மு.க. ஆந்திரத்தின் தெலுங்கு தேசக் கட்சி உட்பட 7 கட்சிகள் ஒன்றிணைந்து 'தேசிய முன்னணி' ஒன்றை அமைத்து காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுகின்றன. ராஜீவ்காந்தியைப் பதவியிலிருந்து இறக்கவேண்டும் என்பதிலே' ஏற்பட்ட ஒருமித்த கருத்தே, பல முரண்பாடுகளையுடைய இவர்களை ஒன்றிணைத்ததேயன்றி மற்றெந்தக் கொள்கையினடிப்படையிலுமல்ல என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஊழலற்ற ஆட்சியை அமைக்கப் போவதாகக் கூறிக்கொள்ளும் தேசிய முன்னணித் தலைவர்களான என்.டி.ராமாராவ், வி.வி.சிங், தேவிலால், ஜோதிபாசு ஆகியோர் மாபெரும் ஊழல்களில் சம்மந்தப்பட்டவர்கள் என்பதும், முன்னணியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான வி.பி.சிங் இந்திராவின் ஆட்சிக்காலத்தில் பல அராஜகங்களுக்குத் துணைபோனவர் என்பதும் மக்களிடமிருந்து மறைக்கப்படமுடியாத ஒன்று. 'தேசிய முன்னணி' யானது இந்திராகாங்கிரஸ் வேட்பாளர்களை எதிர்த்து ஒரே வேட்பாளரை நிறுத்தும் பட்சத்தில் வெற்றிக்கான வாய்ப்பினைக் கொண்டிருக்கிறது எனக் கணிக்கப்படுகின்றபோதும் இப்படிக் கொள்கையில்லாமல் ஏற்படும்கூட்டு ஒருபோதும் நிலைப்பதில்லை. மேலும் இத்தேர்தல் முடிவுகள் இலங்கை அரசியலிலும், குறிப்பாக ஈழத்து நிலைமைகளிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என நம்பலாம். - எனவே வழக்கம் போலவே இம்முறையும் உபகண்டத் தேர்தல் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# நோபல் பரிசு பெற்ற 'கடவுள் மன்னர்' தலாய்லாமா

திபெத்தின் முன்னாள் மன்னரான தலாய்லாமாவுக்கு இந்த ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது. திபெத்நாட்டை புத்தகுருமார்கள் ஆண்டு வந்தார்கள். நிலப் பிரபுக்கள் விவசாயிகளை ஒடுக்கியதால் இவர்களிற்கெதிரான போராட்டம் ஆரம்பமாகியது. சீனாவின் உதவியுடன் 1959ஆம் ஆண்டு விவசாயிகளால் மதவாத மன்னர் தலாய்லாமா விரட்டியடிக்கப்பட்டார். இவர் இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அங்கிருந்து புரட்சியை(எதிர்ப் புரட்சி) மேற்கொள்கிறார்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் பாதிரிமார்கள் பாட்டாளிப் புரட்சியை ஆதரித்திருக்கின்றனர். ஆனால், இந்த மதவாதியான தலாய்லாமா மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கே முயல்கிறார். இவருக்கு அமெரிக்க, மேற்குலக நாடுகளின் ஆதரவு உள்ளது.

மற்றும் இந்த நோபல் பரிசு வழங்குவோர் மக்கள் புரட்சியின் எதிர்ப் புரட்சியாளர்களுக்கே சமாதானப் பரிசு வழங்குவது குறிப்பிடத்தக்கது. தென் ஆபிரிக்கபாதிரியார் டுட்டோ இவர் தென் ஆபிரிக்க மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தாலும் அகிம்சை வழியையே பின்பற்ற வேண்டும் என்கிறார்.

சீனா கூறுவதைப்போல் மனித உரிமை, சுதந்திரம் என்ற பெயரில் மேற்கு நாடுகளின் தலையீடுகள் சோசலிசநாடுகளில் புகுத்தப்படுவதை மறுப்பதற்கில்லை.

* சான்பிரான்ஸிஸ்கோவில் ஒக்டோபர் 17ஆம் திகதி மாலை 15 செக்கன்கள் நடந்த நில நடுக்கத்தின் போது 250க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும், 500 பேர் காயமடைந்தும் உள்ளனர். வாகனங்களில் சென்ற பலர் அதிகமாக இறந்துள்ளனர். பாலங்கள் உடைந்ததிலும், கட்டிட இடிபாடுகளிலும் பலர் அகப்பட்டனர். இந்த நிலநடுக்கத்தினால் ஏராளமான சொத்துக்கள் சேதமடைந்தன. கட்டிடங்கள் இடிந்து விழாவிட்டாலும் வெடிப்புக்கள் ஏற்பட்டதினால் அவைகளை அழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் சான்பிரான்ஸிஸ்கோ, கலிபோர்னியாவிழக்கில் 260 கி.மீ. நீளத்திற்கு நிலம் பிளவுபட்டிருக்கிறது. இது வருடத்திற்கு1.25 செ. மீற்றர் பூமியிலிருந்து கடற்பக்கமாக விலகுகிறது. நிலநடுக்கங்களின்போது பாதிக்காமல் இருக்கும் பாலங்கள் கட்டப்பட்டிருந்தும் சமீபத்திய நிலநடுக்கத்தின்போது பாதிப்படைந்தது வியப்பையே அளித்துள்ளது. நில நடுக்கத்தை அறிவதற்கு பல வகைப்பட்ட கருவிகள் அமெரிக்க அரசாங்கத்தினால் உபயோகிக்கப்பட்டும் மக்களை காப்பாற்ற முடியாமல் போயுள்ளது. மேலும் சோவியத் நாட்டிலுள்ள 'ஆர்மேனியா' என்னுமிடத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது 'மக்களைக் காக்கக் கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை சோவியத் செய்யவில்லை' என்று அப்போது அமெரிக்கா குற்றம் சுமத்தியமை தெரிந்ததே.

www.tamilrangam.net

* இந்தியப்படைவிலகல் ஒப்பந்தப்படி அம்பாறை மாவட்டத்திலிருந்து முதற்கட்டமாக இந்தியப்படையினர் வெளியேறியதை அடுத்து அம்பாறை மாவட்டத்திலுள்ள சிறீலங்கா அதிரடிப்பிரிவு இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டுமென்ற கோரிக்கை வடகிழக்கு மாகாண அரசால் விடுக்கப்பட்டுள்ளபோதும், அம்மாவட்டத்தில் தற்போது மாகாண அரசின் தொண்டர்படைப் பிரிவுகளே சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றனர். அத்துடன்பொலிஸ்நிலையங்களும் செயல்படுகின்றன.

* வடக்கு-கிழக்கு மாகாண பொலிஸ்படையில் சேரத்தயாரென்று விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் கூறியுள்ளார். சுதந்திரமான மாகாணசபை தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளவும், விடுதலைப்புலிகள் இயக்கம் தயார் எனக் கூறிய அவர் "நாம் தேர்தலில் வென்றால் ஈ.பி.ஆர்.எல்.எவ்வை அரவணைக்கத்தயார், நாம் தோல்வியுற்று அவர்கள் வெற்றி பெற்றால் அவர்களுடன் ஒத்துழைக்கவும் தயார்" எனக் கூறியுள்ளார்.
(வீரகேசரி29.10.89)

* "நான் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதால்தான், தமிழ்ப்பிரதேசங்களை அண்டியுள்ள அப்பாவிச்சிங்கள மக்களின் படுகொலைகளைத் தடுக்க முடிந்தது" என்று இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸா ஒரு பேட்டியொன்றில்குறிப்பிட்டுள்ளார்.

* நோர்வேயிலுள்ள ஒரு பாடசாலைக்கட்டடமொன்றில் தமிழ் மாணவர்கள் மத்தியில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த கூட்டமொன்றில் உரையாற்றுவதற்காக ஈழத்திலிருந்து சென்றிருந்த யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு.பிரேமசந்திரன் ஈ.பி.ஆர்.எல்.எவ்இன் மத்திய குழு உறுப்பினர்கள் திரு.சாந்தன் திரு.கேதீஸ் ஆகியோர் அங்குள்ள மாற்று இயக்க ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டுள்ளனர். ஏனைய மாணவர்களின் உதவியினால்ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்ட இவர்கள் ஈழம் திரும்பியுள்ளனர்.

பிந்திய செய்தி:-

கடந்த 12-11-1989 திகதியன்றும், மறுநாளும் J.V.Pயின் முக்கிய தலைவர்களான ரோகண விஜயவீர, ஹேரத், உபதிஸ்ஸ கமநாயக்கா ஆகியோர் இலங்கை இராணுவத்தால் சுடப்பட்டு மரணமடைந்துள்ளதாக சர்வதேச செய்திஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன.

www.tamilrangam.net

# வாசகர் கடிதங்கள்:

சஞ்சிகையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு விமர்சனங்களின் மூலம் 'தேடலை' நெறிப்படுத்துகின்ற வாசகர்களுக்கு எமது நன்றிகள்.

-தேடல்-

செல்வம்
கனடா.
15.10.89.

அன்புடன் தேடலுக்கு,

நண்பர் குகன் என்பவர் மூலம் தேடல்கள் கிடைக்கப்பெற்றேன். அவைகளை இங்கு 'தேடகம்' என்னும் தமிழ் நூல் நிலையத்திற்கு கொடுத்திருக்கிறேன்.

அருந்ததியின் பக்கங்கள் சிறப்பாக இருக்கின்றன. குறிப்பாக ஆடி ஆவணி 89இல் அவர் எழுதிய 'ஞானசத்துரு' படவிமர்சனமும், சத்தியஜித்ரே யின் அறிமுகமும்மிகவும் பாராட்டுக்குரியது. அருந்ததியின் கலைப்படைப்புக்களை நீண்ட நாட்களாக ரசித்து வருகிறேன். இவர் இன்னும் முயர்ச்சிசெய்தால் கலை இலக்கியத்தில் சில உன்னதங்களை அடையலாம்.

1989 ஆவணி புரட்டாதி இதழில் எஸ். அகஸ்தியரின் 'இயக்க இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும்' என்ற கட்டுரை அபத்தமான– இந்தத லைமுறை தோன்றுமுதலே எழுதிவருகின்ற ஈழத்தமிழ் எழுத்தாளர் என்ற வகையில் அவருக்கு மரியாதைசெலுத்துகின்றேன். ஆனால்......

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் இருக்கும்போது இவரும் இவர் சார்ந்தவர்களும் ஈழத்தமிழர் சுகபலமாக இருந்தார்கள் என்ற நினைவுடன் தான் செயற்பட்டார்களா? தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம், சுதந்திரத்திற்கும் சுபிட்சத்திற்குமுரியவர்கள் என்று இவர்கள் சொல்ல இந்தனை காலம் சென்றதே..!

அகசரி, தன்னுடைய 40 வருட எழுத்துலக அனுபவத்தில் பாரதி-யும் புதுமைப்பித்தனும் ஏன், ஈழத்து மகாகவியும் எந்தக்கட்சியினை என்பதை இவர் ஏன் சொல்லவில்லை.

நன்றி

செல்வம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வணக்கம், தேடல் பத்திரிகையை ஆரம்பத்திலிருந்து படித்துவருகின்றேன். கடந்த இதழில் (அதாவது 6வது இதழ்) சில நிறைவான பகுதிகள் வெளிவந்தாலும் சில குறைகளும் காணப்படுகின்றது.

எம்மக்களின் நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைச் செய்திகளைக்காணமுடியவில்லை. உலகச் செய்திகளையும் காணவில்லை. அடுத்து இலங்கையில் ஏற்படும் திடீர் அரசியல் மாற்றமான இலங்கை அரசு விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைபற்றி எதுவித செய்திகளும் வெளிவரவில்லை. காரணம் என்ன? இந்நிலையில்உரைகள் போகிற போக்கில், வாக்கும் வக்கும் பக்கங்கள் தேவைதானு?

அடுத்து இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்திய அமைதிப்படையின் வெளியேற்றம் பற்றிய உங்களது நிலைப்பாடு வெளியேறியபின் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களின் பாதுகாப்புக்கு யார் உத்தரவாதம்? இவை பற்றிய தேடலின் விளக்கத்தை அடுத்த இதழில் எதிர்பார்க்கின்றேன்.

அடுத்து, ஆசிரியர் கருத்தில் எமது அடுத்த சந்ததியின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்ற பக்கத்தில் இளைஞர்கள் கடத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்படுவதாக இதனை வடக்கு கிழக்கு மாகாணசபை செய்வதாகக் கூறியிருந்தீர்கள். இதனைவிடுதலைப்புலிகள் உட்பட எல்லா இயக்கங்களும் செய்கின்றன. அதனைப்பற்றி குறிப்பிடவில்லை. தனிய மாகாணசபையையே சுட்டிக்காட்டினீர்கள். கொழும்பில் முகாம் திறந்துள்ளதாகக் குறிப்பிட்டீர்கள். முன்பே முகாம் உள்ளது (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில்) ஆசிரியர் குழுவிற்குத் தெரியவில்லை. இவ்வளவு செய்திகளைத் தரும் கடிதங்கள் விடுதலைப் புலிகள் இலங்கை அரசு பற்றிய விபரங்களைத் தெரியப்படுத்தவில்லையா? காரணம் என்ன?

தேடல் பத்திரிகை வளர எனது வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
சி. குகன்.

---

தேடல் 6வது இதழில் இலங்கைச் செய்திகள், உலகச் செய்திகள் என்பவை இடம்பெறாமல் போனமைக்காக தங்களை போன்ற மேலும் பல வாசகர்கள் குறைபட்டுள்ளனர். முடிந்தவரை இலங்கைச் செய்திகளைதருவதற்கு முயல்கின்றோம். இலக்கியப் பக்கங்களை அதிகரிப்பதற்காகவே உலகச்செய்திகளைத் தவிர்த்திருந்தோம். எனினும், மிக முக்கியமாக உலகில் நடக்கும் மாற்றங்கள் பற்றிய செய்திகள் இடம்பெறும். மற்றைய உங்களது கேள்விக்குரிய பதில்களை இந்த இதழிலும் இதனைத் தொடர்ந்து வரும் இதழ்களிலும் நீங்கள் எதிர்பார்க்கலாம்.

-ஆசிரியர் குழு-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



ஆசிரியர் குழுவிற்கு,

குறிப்பாக எமது தேடல் என்கின்ற பகுதியில் யாழ்ப்பாணத்துக் கடிதங்களை மட்டும் சான்றாக வைத்து ஈழத்து நிகழ்வு இப்படி இருக்கிறது என்றும், ஓர் இடத்தில் வடக்கிலமைந்த மகாண ஆட்சியினரின் இன்றைய நடவடிக்கைகள் என்று குறிப்பிட்டிருப்பதும் ஈழத்தினுடைய எல்லைப்பரப்பு யாழ்ப்பாணக்குடா நாடுதான் என்பதை நீங்கள் தீர்மானித்து அந்த மக்களுடைய பிரச்சனைகளைத் தான் ஈழப்பிரச்சனை என்கின்ற தெளிவான சிந்தனையை வெளிக்காட்டியிருக்கிறீர்கள். உங்களுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் தவிர வேறுயாருக்கும் இதுவராது. ஏனெனில் நீங்கள் உலகளாவிய பார்வையுடையவர்கள். யாழ்ப்பாணத்து சீமான்களின் கால்களிலே கல்லுத்தடக்கிறுல் கூட ஏதாவது இயக்கங்களைச் சாட்டிக் கொண்டு சொர்க்கமென்று எண்ணிக்கொள்கின்ற, ஐரோப்பிய நாட்டிற்கோ அல்லது அதற்கும் மேலாக அமெரிக்காவிற்கோ கனடாவிற்கோ சென்று பணம் உழைக்க காத்திருக்கின்ற யாழ்ப்பாண பூர்சுவாக்கள் உங்கள் பார்வைக்கு பாட்டாளிகள்தான்.

சிறீலங்கா அரசு புலிகள் இயக்கத்தைப் பயன்படுத்தி இந்தியா இராணுவத்தைவெளியனுப்பி மாநில சபையைக் கலைத்து மீண்டும் தனது கொலைவெறி ஆட்டத்தை ஆரம்பித்துக் கொள்ள திட்டமிட்டு செயல்படுகிறது.

மீண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் சாகப் போகிறார்கள். அதை மனதில்வைத்தே இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என நான் நினைக்கிறேன். ஆனால் முதலாளித்துவ செய்தி தொர்டர்பு சாதனங்களும் யாழ்ப்பாண பூர்சுவாக்களும் ஆள்க்கடத்தல் என்ற சொற்பதத்தின் ஊடாக வடகிழக்கு மகாண அரசின் முன்னேற்பாடானநல்ல திட்டத்தை நசிக்கிக்கொண்டிருக்கின்றனர்.

எனினும், ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் பயிற்சி எடுத்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். இவர்களில் வெளிநாடு வர பொருளாதார வசதி இல்லாதவர்கள்,தேசப்பற்று கொண்டவர்களும் மக்களுக்காக போரிடத்தான் போகிறார்கள். அப்பொழுது உங்களில் பலர் ஆ...... பெண்களையும் பிடித்து பயிற்சி கொடுத்திருக்கலாமே என்று அப்பிளைச் சுடித்து சுவைத்துக் கொண்டு அரசியல் பேசுகிற வாய்கள் உழறும் என்பது கருத்து.

இங்ஙனம்,

கண்ணம்மா,

---

நீங்கள் ஓர் சார்பு நிலையில் நின்று கொண்டு பிரச்சனைகளைப் பார்க்கிறீர்கள். ஈழத்தில் இன்று நடக்கும் அராஜகச் செயற்பாடுகளை எந்த விதத்திலும் நியாயப்படுத்தமுடியாது. நீங்கள் இலங்கையில் நடக்கும் நிகழ்வுகளை சார்பு நிலையிலிருந்து பார்க்காமல் ஓர் விமர்சனக் கண் கொண்டு பார்த்தால் உண்மை புலப்படும். மேலும் விமர்சனம் என்பது தனிநபர் தாக்குதல்களாக இல்லாதிருந்தாலே ஆரோக்கியமானது.

– ஆசிரியர் குழு–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

10.09.89.

தெளிவான சிந்தனையூடாக தேடலை நடத்திவரும் ஆசிரியர் குழுவுக்கு என் பாராட்டுகள்.

முற்போக்கு கருத்துக்களைத் தாங்கி பரிசில் ஒரு தரமான பத்திரிகை என்று கூறத்தக்க வகையில் தேடல் இடம்பெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி. இருந்தும் மாதமொருமுறை மலர்ந்த நீங்கள் இருமாதத்துக்கொருமுறை மலர்வதன் மர்மம் என்ன? காய்க்கும் மரத்துக்கு கல்லெறி அதிகம் இருந்தாலும் இவற்றையெல்லாம் - பொருட்படுத்தாமல் உங்கள் சேவையைத் தொடருங்கள். தேடல் 4,5 என் கைகளுக்கு அண்மையில்தான் கிட்டியது. தேடல் 4ல் அருந்ததியின் 'வருக வருக தோழர்களே' என்னும் புதுக்கவிதை மிகவும் நன்றாக இருந்தது. ஏனெனில் அதிகமான இளைஞர்கள் அதுவும் வெளிநாடுகளில் அகதிகள் என்ற போர்வையில் இருப்பவர்கள், இயக்க முத்திரைகளை தாங்கி தாங்கள் இன்ன இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று பேசிப்பேசியே காலத்தை வீணுக்கும் பொழுது போக்கு கும்பல்கள் அனைவருக்குமே ஒரு சாட்டையடி. அற்புதமான கவிதை எழுதிய அருந்ததிக்கு என் வாழ்த்துக்கள். தேடல்5ல் அருந்ததியின் 'நம்பிக்கை' என்னும் கவிதை அழகு நடையாக இருந்தாலும் அதன் உட்பொருளை விளக்கி கொள்வதற்கு கடினமாகவிருக்கிறது. இலக்கணத்தமிழில் அல்லாமல் இலகு தமிழில் எழுதினால் என்னைப் போன்ற வாசகர்கள் இலகுவில் விளங்கி கொள்வார்கள். அடுத்து வித்தியாவின் 'முற்றுப் புள்ளி' என்னும் கவிதை ஆண் இனத்தை சாடுவதாக இருந்தாலும் ஆண் ஆதிக்கத்தில் இருந்து பெண் விடுபடுவதற்கு ஏற்ற நல்ல கருத்துக்களைத் தாங்கி மெருகூட்டி நிற்கிறது. இரவியின் "தலைவிதி" என்னும் கவிதை மக்களின் யதார்த்த நிலையினை சித்தரிப்பதாக இருக்கின்றது. வித்தக பண்டிதரின் 'நாட்டு பாத்திரம்' நன்றாகவே இருக்கின்றது. உரைகல் போகின்ற போக்கில் நளினமாக நல்ல கருத்துக்களை சொல்லுகின்றது. 'அந்தமான் தீவில்' கற்பனையாக கதை வடித்திருந்தாலும் நல்ல விடயத்தை கூறுகிறது. ஆனால், சிறுகதைக்குரிய நடை தெரிவில்லாதது போல் இருந்தது. பிரெஞ்சுப் புரட்சியின் வரலாறு உங்கள் சஞ்சிகையில் இருந்துதான் கொஞ்சமாவது அறிந்து கொண்டேன். மொத்தத்தில் எல்லா விடயங்களுமே பயனுள்ளவையாக இருந்தாலும் அட்டைப்படம் இல்லாதது ஏதோ ஒரு குறையை ஏற்படுத்தியது போல் இருந்தது.

மொத்தத்தில் என் எண்ணச்சிந்தனையில் என்னைத் தொடர்ந்து வாசிக்கத்தூண்டும் ஒரு தரமான பத்திரிகையாக தேடல் திகழ்வதால் உங்கள் சஞ்சிகையை ஒவ்வொரு மாதமும் தவழவிடுங்கள். நல்ல பயனுள்ள முற்போக்கு அம்சங்களை உள்ளடக்கிமேலும் "தேடல்" மக்கள் மத்தியில் மலர என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
சி. இராகுலன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

8—10—1989

தேடல் ஆறாவது இதழின்—

அட்டைப் படத்தில் எவ்வளவு தான் நம்பிக்கைகள் வேர் ஊன்றிய போதிலும் அதில் ஓர் ஆழமான பிரதிபலிப்புகள் ஒன்றும் ஏற்படவில்லை என்றே சொல்ல வேண்டும்

மகாகவி பாரதியாரைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் நடக்கும் இன்றைய கால கட்டத்தில் அவரை நினைவு கூர்ந்து கவிதைகள் சிலவற்றை சுட்டிக்காட்டியதோடுவா சகர்களை ஓர் தேடலுக்கு இட்டுச் சென்றது நன்றே.

'சுதந்திரம்' என்ற கவிதையில் நிகழ்வுகளை உணர்வுபூர்வமாக விளங்கிக்கொண்ட கவிஞ ரின் கோபவேச உணர்ச்சிகளை காணமுடிகிறது.

தேடலின் ஆசிரியர் குழு நீண்ட நாட்களின் பின் யதார்த்தத்தை அணுகிடும் பார்வை யைஇன்னும் விரிவாக்க வேண்டும் என்பதே அவா.

இனியும் வேண்டாம் மவுனம் எனும் கவிதையில்...

தன் மனத்தினுள் புழுங்கும் வேதனைகளை சொல்லாமல்வடிக்கும் கவிஞர்,
சிந்திந்தவர்களோ புதைகுழியினுள்
சிந்திக்கத் தெரிந்தவர்களோ வாய்பேசா மௌனிகளாக

என்று குறிப்பிடுகிறார். இதில் யாரை சிந்திக்கத்தெரிந்தவர்கள் என சொல்ல வருகி றார்?

வித்தியாவின் 'இவர்கள்' என்னும் கவிதையில்—
அந்தகார இருளில் இருந்தவர்கள் எல்லோரும் ஓர் நாள் விழித்துக் கொண்டார்கள் என்று குறிப்பிட்டு பின்—
விழித்துக் கொண்ட இவர்கள் நிஜமாக விழித்தெழவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களது விழிப்பு இதுதான். எனெனில் இவர்களது சுயம்சமே அதுதான்.

'கோரப்பலி' என்ற சிறுகதை ஊரில் நடந்த, நடக்கும் நிகழ்வுகளைய அடிப்படையா கக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அதன் நடை நன்றாகவே அமைந்துள்ளது.

'இயக்க இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும்'

என்ற கட்டுரையில் அகஸ்தியர் அவர்கள் ஒரு எழுத்தாளனின் எழுத்து எப்போதும் ஏதோ ஓர் வர்க்கம்சார்ந்தே எழுதப்படும்என்ற உண்மையை எடுத்துக்காட்டியுள்ளார்.

ரசிகமணி வி. வி. வைரமுத்துவைப் பற்றிய கட்டுரை சஞ்சிகைக்குறுவால்விமர்சன ரீதி யாக ஆரயப்பட்டு எழுதப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்படிக்கு
க. மூர்த்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

75014 பாரிஸ்,
10.10.1989.

தேடல் குழுவினருக்கு,

உங்கள் தேடல் 6வது இதழ் ஆசிரிய தலையங்கம் "எமது அடுத்த சந்ததியின் எதிர்காலம் எப்படி இருக்கும்" நன்றாகவே அமைந்திருந்தது. தொடர்ந்தும் இதுபோல இன்றைய புதிய அராஜகவாதிகளை தேடல் அம்பலப்படுத்தவேண்டும்.

உங்கள் மற்றைய இதழ்களைவிட ஆறுவது இதழ் வடிவமைப்பிலும்மிக வும் கவர்ச்சிகரமாக இருந்தது.

தேடல் தொடர்ந்துவர வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
தேடல் வாசகன்,
அருள்நேசன்.

---

ஜெயசந்திரன், பி.காம்,
கூட்டுறவுசார்பதிவாளர்,
காவேரிப்பட்டணம்,
தமிழ்நாடு.
5.10.88.

வணக்கம்,

ஈழத்தமிழர் நண்பர் சாம்சன் அவர்கள் மூலம் தாங்கள் நடத்திவரும் "தேடல்" தமிழ் இதழ்கள் கிடைத்துமட்டில் லாத மகிழ்ச்சி அடைந்தேன். ஈழத்தமிழர்கள் வாழ்வில் முன்னேற்றமும், நல்ஆதரவும் கிடைக்கவேண்டும் என்று விரும்புகின்றேன்.

தங்கள் அரிய முயற்சிகள் எடுத்துக்கொண்டு சீருடனும் - சிறப்புடனும் வெளியாகும் "தேடல்" "ஒரு தேடக்கிடை காத புதையல்"

ஈழத்தைப் பற்றி அனைவரும் அறியும் வண்ணம் தாங்கள் செய்துவரும்பணி என்றும் சிறந்து மேலோங்கி வரவேண்டி வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள,
ஜெயச்சந்திரன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net



# சார்லிசாப்ளின்

**சாப்ளின் நூற்றாண்டு**

- அருந்ததி

இவ்வாண்டில் நூற்றாண்டு விழாக்காணும் திரைப்படக்கலைஞன் சார்லி சாப்ளின் பற்றி எல்லாப் பத்திரிகைகளுமே எழுதுகின்றன. இதில் திரைப்படங்களுக்கென்றே செயல்படும் சினிமா சஞ்சிகைகள், மற்றும் முதலாளித்துவ வியாபார பத்திரிகைகள் என்பன சார்லி சாப்ளினை வெறுமனே ஒரு நகைச்சுவை நடிகர் என்றும், முப்பது வயதிலேயே கோடீஸ்வரர் ஆகியவர் என்றும் தமது வக்கிரத்துப்போன வர்க்க நிலைப்பாட்டிலிருந்து வழுவாது எழுதுகின்றன. ஆனால், அநேகமான முற்போக்குச் சஞ்சிகைகள் இவர்பற்றிய உண்மையான மதிப்பீட்டினை செய்துள்ளன.

மக்களை எளிதில் நெருங்கக்கூடிய விஞ்ஞானபூர்வமானதோர் கலைச்சாதனமாக - விளங்கும் சினிமா பற்றிய வரலாறு ஒன்று எழுதப்படுமாயின் அதில் விடுபட்டுப்போகமுடியாத - போகக்கூடாத ஒரு பெயர் தான் சார்லி சாப்ளின்.

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் என்று தம்மை மார்தட்டிக் கொண்ட பிரிட்டன் பிரபுக்களின் ஒடுக்குமுறை சுரண்டலுக்கு சாட்சியாக விளங்கிய இலண்டனின் பெரும் பகுதி மக்களாகிய நடுத்தர, ஏழை மக்களை சார்ந்த ஒரு ஊரிஸ் குடும்பத்தில் 1889 ஏப்பிறல் 16ம் திகதி பிறந்த சாப்ளின் அந்நியதேசங்களையும், சொந்த தேசத்தையும், சுரண்டிக்கொழுத்துக் கொண்டிருந்த பிரவுத்துவ வம்சங்களினால் பசியையும், பட்டினியையும், கொடிய வறுமையையும் அநுபவித்துச் செத்துக் கொண்டிருந்தவர்களின் அன்றைய சாட்சியமாக இருந்தார்.

தந்தையார் குடிகாரராக இருந்தமையால், தாயார் இவரையும், இவரது தமையனாரையும் நாடகங்களில் சிறு, சிறு வேடங்களில் நடித்தும், கூலிவேலை செய்தும் வளர்த்தார். ஒருநேரச் சாப்பாட்டிற்கே திண்டாடும் நிலை, வறுமை வாட்டி எடுத்தது. அதிகமாக உடல்வருத்தி கூலிவேலை செய்த இவரது தாயார் இளமையிலேயே முதுமை எய்தி மூளை பாதிப்புக்குள்ளாகி நோய்வாய்ப்பட்டார்.

சுரண்டுகின்ற, சுரண்டப்படுகின்ற சமுதாய அமைப்பின் கொடிய வறுமையின் அகோரங்கள் அனைத்தையும் அநுபவித்து இவர் சிறுவயதில் சாப்பாட்டுக்காகவே நாடக குழுவில் சேர்க்கப்பட்டார். அப்போதைய நிலையில் ஒரு முழு றொட்டியைக் காண்பதே இவரின் மகிழ்ச்சிகரமான நாட்களாகவிருந்தது. நோய்வாய்ப்பட்ட இவரது

www.tamilrangam.net

தாயார் "ஒரு குவளை தேனீர் கிடைத்திருந்தால்கூட நான் குணமடைந்திருப்பேன்" என்று கதறி அழுதது இவரது உள்ளத்தைவிட்டு அகலவேயில்லை. சாப்ளின் எனப்படும் இந்த மாபெரும் கலைஞனின் சமூகப் பார்வையைத் தூண்டிவிட்ட நிகழ்ச்சிஇது. உலகம் சமச்சீரற்றுக் காணப்படுவதற்கு காரணமென்ன? வறுமையை உண்டாக்கியவர்கள் யார்? ஏன் இந்த நிலை? இவைகளைத் தீர்ப்பதெப்படி? இந்த வினாக்களை எழுப்பி தீவிரமாக அதற்குரிய விடைகளைத்தேட ஆரம்பித்தார் சாப்ளின். எத்தனையோ விதமான கூலித்தொழில்களுக்குள் புகுந்து சிந்திய வியர்வையும்; தீராத பசியையும் மாத்திரமே பெற்றுக்கொண்ட சாப்ளின் பின்னாளில் திரைப்படத்தின்மூலம் உலகின் கோடிக்கணக்கான மக்களை சிரிக்கவைத்தார். ஒரு கோமாளி போல வெள்ளித்திரையில் தோன்றும் சாப்ளின் மக்களைச் சிரிக்க வைத்தவர் மட்டுமல்ல, சிந்திக்கவும் வைத்தவர். ஒரு நாடகக் குழுவுடன் அமெரிக்கா சென்ற சாப்ளின் பின்னர் அதிலிருந்து விலகி தெருக்களில் நின்று பலவிதமான நகைச்சுவைச் செயல்களைச் செய்துகாட்டினார். தன்னுடனிருந்த மற்றக் கலைஞர்களுடன் சேர்ந்து ஓர் நாடகக் குழுவாகவே இயங்கினார். தெருக்களில் தான் அவரது ஆரம்பகால நாடகங்கள் நடித்துக்காட்டப்பட்டன. பின்னர் சிறு சிறு வசதிகள் ஏற்பட அரங்குகளில் அவரது நாடகங்கள் நடத்தப்பட்டன.

ஆரம்பத்திலிருந்தே சாப்ளினுக்கு திரைப்படத்தில் நடிக்கவேண்டுமென்ற எண்ணம் தலை தூக்கியிருந்தது. தனது கற்பனைகளையும், எண்ணங்களையும் நிஜமாக்குவதற்கு ஒரு திரைப்படக் கமரா வாங்கவேண்டுமென்று அடிக்கடி கூறிக்கொள்வார். அந்நேரத்தில் திரைப்படக்கலை ஆரம்பப்படிநிலையில் இருந்தது. 'மார்க்செனத்' என்ற தயாரிப்பாளர் சிறு சிறு துண்டுப்படங்களை எடுத்துக்கொண்டிருந்தார். அவர் சாப்ளினுடைய திறமையைப் பார்த்து தனது படத்தில் சாப்ளினை நடிக்கவைத்தார். 'கென்றிலேர்மன்' என்பவர் இயக்கிய 'மேக்கிங் எ லிவ்விங்' என்ற 1914 ஜனவரியில் வெளியிடப்பட்ட துண்டுப்படமே தான் சாப்ளினது முதல் திரைப்படமாகும். இதன்மூலமே அமெரிக்கத் திரையுலகில் சார்லி சாப்ளின் என்னும் மாபெருங்கலைஞனின் கலையுலகப் பயணம் ஆரம்பமாகியது.

மக்களைச் சுலபமாகச் சென்றடையும் திரைப்படக்கலையின் மூலம் ஏராளமானவிடயங்களைத் தொட்டுக் காட்டலாம் என்ற முடிவுக்குவந்த இவரது திரைப்படங்களிலே வாழ்க்கையின் அடிமட்டத்தில் உள்ள எளிய மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகள் தான் கருப்பொருள்களாகின. முதலாளி வர்க்கத்தின் சீரழிந்துபோன கலாச்சாரத்தையும், பணக்கார வர்க்கத்தின் பகட்டான, போலித்தனமான வாழ்க்கையையும் தனது படங்களிலே நையாண்டி செய்தார். இதனால் இவரைக் கேலி செய்தவர்களுமுண்டு.

வாழ்வின் எதார்த்தங்களை மக்களுக்குப் புரியவைக்க இவர் நகைச்சுவையையே கையாண்டார். மனிதனிடம் இயல்பாகவேயுள்ள நகைச்சுவையுணர்வின் மூலமாக அனேக விடயங்களைப் புரிய வைப்பது சுலபம் என்ற உண்மையினை சாப்ளின் நன்றாகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அறிந்திருந்தார். மக்களுக்கு பயன்படாத எந்தக் கலையும் நிராகரிக்கப்படவேண்டியவை என்பதில் அழுத்தமான கருத்தைக் கொண்டிருந்த இவர் ஒரு திரைப்படத்திற்கான கருவைத் தேர்வு செய்யும்போது அது மக்களுக்கு எந்தவகையில் பயன்பாடுடையது என்பது குறித்தே அதிகமாகப் பரிசீலிப்பார். உழைக்கும் வறியமக்களின் மேலான வரலாற்றுப் பாத்திரத்தைப் புரிந்துகொண்டிருந்த சாப்ளின், இச் சமூகமாற்றத்திற்கான போராட்டத்தை வற்புறுத்தும் கருத்துக்கள் தவிர்ந்த மற்றெதுவும் மக்களுக்கெதிரானது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். எனவே அவரது அனைத்துப் படங்களிலும் இக்கருத்தின் வீச்சினைக் காணலாம்.

சினிமா என்பதை வெறும் பொழுதுபோக்குச் சாதனமாகவும் பணம் பண்ணுவதற்கு சுந்த ஓர் விற்பனைப் பண்டமாகவும் கருதிக்கொண்டு செயல்படும் இன்றைய தமிழ் சினிமா முதலாளிகளினால் இரசனை மழுங்கடிக்கப்பட்டு, யதார்த்தத்திற்குப் புறம்பான மாஜைகளில் மூழ்கிப் போய், சமூக மாறுதல் பற்றிய பிரக்ஞையற்று வாழ்க்கையின் அடித்தட்டில் தொடர்ந்தும் அல்லலுறும் மக்களின்மேல் இன்றும் இன்னும் சவாரி செய்யும் எமது செல்லரித்துப்போன கலைவியாபாரிகள் சாப்ளின் போன்ற மனிதநேயக் கலைஞர்களின் வாழ்வினைத் திரித்து வெளியிட்டு அதையும் காசாக்கிவிடுகிறார்கள்.

இன்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னர், திரைப்படக்கலையானது தொழில்நுட்பரீதியாக முன்னேற்றமடையாத காலம், ஊமைப்படங்களாகவே தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தநேரம், இன்று இருப்பதைப் போன்ற எந்த வசதியுமில்லாத நிலை. ஆனால் அப்போதே திரைப்படங்களில் மாபெரும் சாதனைகளை நிகழ்த்திக் காட்டினார் இந்த சாப்ளின். கலை மொழிக்கு அப்பாற்பட்டதென்பதற்கு இவரது திரைப்படங்களே தக்க சான்றுகளாகும். பின்னாளில் பேசும் படங்களாக வெளிவரும்காலத்திலேயும் தனது கொள்கையிலிருந்து வழுவாமல் திரைப்படங்களை எடுத்தார்.

வாழ்வின் உண்மையைத் தேடும் இவரது படைப்புக்களில் மனிதநேயம் இழையோடியது. மக்கள் குறித்தும், சமுதாய மாற்றம் குறித்தும் சிந்திப்பவர்களை வேறாக தமது வர்க்க நலன்களுக்காக வரிந்து கட்டிக்கொண்டு தூற்றுபவர்கள் இன்றுவரை இருக்கின்றார்களே. அத்தகையோரின் தூற்றுதல்களுக்கு அன்றே ஆளானார் சாப்ளின். தான் கஷ்டப்பட்டதால்தான் தனது படங்களிலெல்லாம் வறுமையைப்பற்றி இவர் காட்டுகிறார் என்றெல்லாம் அன்றைய பத்திரிகைகள் சாப்ளினைப்பற்றிக் கேலி செய்து எழுதின. இவைகளெல்லாம் சார்லி சாப்ளினுடைய சமூகப் பார்வையை இன்னும் செழுமையாக்கின என்றே கூறலாம். அவரது திரைப்படங்கள் ஒவ்வொன்றுமே ஒவ்வொரு கலைப் பொக்கிசம். மேல்நாட்டு வர்க்கத்தினரின் கேவலமான நிலை, சுரண்டும் முதலாளிகளின் கொடுமைகள் என்பவற்றை கிண்டலும் கேலியும் செய்து, அடித்தட்டு மக்களின் அவல நிலையை மிக உயர்ந்த மனிதாபிமான நிலையிலிருந்துகொண்டு சித்தரிக்கும் இவரது திரைப்படங்களில் 'தி சர்க்கஸ்' என்னும் திரைப்படமும் முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய ஒன்று.

www.tamilrangam.net

'சர்க்கஸ்' நடத்துகின்ற முதலாளி தன்னிடம் வேலை செய்கின்றவர்களை எப்படி வேலைவாங்கிச் சுரண்டுகிறார் என்பதும், வேலை செய்பவர்கள் பிழைவிட்டால் சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடக்குமாறு தண்டிக்கப்படுவதும், அதனால் பயத்தோடு அவர்கள் வேலை செய்வதும் சமுதாய ஏற்ற இறக்கத்தை அப்பட்டமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. இந்த சர்க்கஸ் கூடாரத்தில் தற்செயலாக வேலைக்குச் சேர்ந்த சாப்ளின் அவற்றை நேரில் காண்கின்றார். முரண்டுபிடிக்கும் சாப்ளினுடைய செயல்கள் பார்ப்பவர்களை வயிறு குலுங்கச் சிரிக்கவைப்பதோடு சமுதாயத்தின் உண்மை நிலையினை அப்படியே மனதில் பதியுமாறு செய்துவிடுகின்றது. சர்க்கஸில் வேலை செய்யும் மனிதர்கள் எவ்வாறு உயிரைப் பணயம் வைத்து வேலை செய்கிறார்கள் என்பதும், இதுபற்றிய எந்தவிதமான கவலையுமின்றி முதலாளி எவ்வாறு பணத்தில் மாத்திரம் குறியாக உள்ளார் என்பதும் நன்றாகச் சித்தரிக்கப்படுகின்றது. மனிதநேயம், உண்மையான அன்பு, காதல் என்பதெல்லாம் இப்படத்தில் மிக உயர்ந்த நிலையில் நகைச்சுவையுணர்வினூடாகச் சித்தரிக்கப்படும் பாங்கு இன்றைக்கு 65 ஆண்டுகளுக்கு முன்னர் ('த சர்க்கஸ்' 1925, 27) அதுவும் ஓர் ஊமைப்படத்தில் என்றால் சாப்ளினின் மேதைத்தனத்திற்கு வேறு சாட்சியங்களே தேவையில்லை. 'பிற்லின் சொலேர்ஸ்', 'த கிட்', 'எ டோக். லைப்', 'திசோல் ட்றஸ்', 'பேபடே'? 'தி ஐடில் கிளாஸ்',

என சிறு சிறு துண்டுப்படங்களாகவும் முழுநீளப்படங்களாகவும் எண்பதுக்கு மேற்பட்ட படங்களைக் கொடுத்த இவர் தானே ஓர் நடிகனாகவும், எழுத்தாளனாகவும், இசை தயாரிப்பு, இயக்குதல் போன்ற எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்பவனாகவும் - திகழ்ந்தார்.

வாழ்க்கையின் மோசமான அனுபவங்கள், மனிதர்களின் அவலங்கள் சமுதாயஏற்றத் தாழ்வுகள் என்பன சாப்ளினின் உலகப்பார்வையை விரிவாக்கி அவரை ஓர் கம்யூனிஸ ஆதரவாளராக்கியது. பாசிச போர்வெறியால் உலகம் சூழப்பட்டிருந்த நேரம். கிட்லரின் நாடு பிடிக்கும் வெறி நாஜிப்படைகளின் மூலம் ஐரோப்பாவையே பிணக்காடாக்கிக் கொண்டிருந்தவேளை, ஜேர்மனியரே உலகத்தை ஆளப்பிறந்தவர்கள் என்ற தேசிய வெறியைத் தூண்டிவிட்டு 65இலட்சம் யூதமக்களை படுகொலை செய்து குவித்துக்கொண்டிருந்த கிட்லரின் பாசிசத்திற்கெதிராக, எத்தனையோ கொலை மிரட்டல்களுக்கும், மரண அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் உலகக்கலையரங்கில் ஓங்கிக் குரலெழுப்பினார் சாப்ளின். முதலாளித்துவத்தின் கொடுமையை, சுரண்டலை, இயந்திரங்களோடு இயந்திரமாகிப்போன தொழிலாளர்களின் அவலத்தைத்தனை 'மொடேர்ன் ரைம்ஸ்' (1934) என்னும் திரைப்படத்தின் மூலம் சித்தரித்தஇவர் கிட்லரை எதிர்த்து, பாசிசத்தை எதிர்த்து, உலக ஜனநாயகத்தை உன்னதமான, சமாதானத்தை வற்புறுத்தி 'தி கிரேட் டிக்டேற்றர்' (1938-40 - மாபெரும் சர்வாதிகாரி) என்ற திரைப்படத்தை எடுத்தார். இத்திரைப்படங்கள் உலக பாசிசவாதிகளைக் கலக்கின, குலைநடுங்கவைத்தன. அமெரிக்க முதலாளிகளும், பாசிஸ்ட்டுக்களும், பாதிரிமார்களும் சாப்ளினுக்கெதிராகக் கிளர்ந்தார்கள், பல அவதூறுகளைக் கிளப்பினார்கள். பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்கள்.

www.tamilrangam.net

நீண்ட காலமாக அமெரிக்காவில் வாழ்ந்தாலும் குடியுரிமை பெற விரும்பாமலே இருந்த சாப்ளின் எதற்குமே அஞ்சவில்லை. அப்போது இரண்டாம் உலக யுத்தம் மூளத்தொடங்கியுள்ளநிலை. சோவியத்தின் மீது ஜேர்மனிய கிட்லரின் நாஜிப் படைகள் போர் தொடுத்தன. சோவியத்துக்காதரவாக சாப்ளின் தீவிரப் பிரச்சாரம் செய்தார். அவரைக் கம்யூனிஸ்ட் என்றெல்லாம் தூற்றினார்கள்.

"ரஸ்யாதான் உலக ஜனநாயகத்தைக் காக்கும் போர் முன்னணி, மனித நாகரிகத்தின் வாழ்வே ரஸ்யாவின் வெற்றியில் தான் தங்கியுள்ளது. எனவே ரஸ்யா தோற்கக்கூடாது., ரஸ்யா தோற்றால் உலகில் மறைந்திருக்கும்பாஸிட்டுகள் எல்லோரும் கிட்லருடன் கூட்டுச் சேர்ந்துகொள்வார்கள், உலகத்தைக் காப்பாற்ற வேண்டும், உலகைக்காப்பாற்ற வேண்டுமென்றால் போரில் ரஸ்யா தோற்கக்கூடாது, ரஸ்யப் போர் முனையில் சாவா, வாழ்வா என்ற போராட்டத்தில் ஜனநாயகம் இருக்கிறது. நமது உலகம், நமது வாழ்வு, நமது நாகரிகம் நமது காலடியில் நொறுங்கிக்கொண்டிருக்கிறது. நாம் உடனேமுடிவெடுத்தாக வேண்டும்" என்று அவசர அவசரமாக உலக மக்களுக்கு அறைகூவல்விடுத்தார் சாப்ளின்.

இறுதியில் அமெரிக்காவை விட்டு வெளியேறிய இவர் லண்டன் வந்து சேர்ந்தார் அங்கும் இவருக்கு மனிதகுல விரோதிகளால் அனேக தொல்லைகள் ஏற்பட்டன. எனினும் தனது கலைப்படைப்புக்களின் மூலம் இறுதிவரை அவற்றிக்கு எதிர்த்தாக்குதல்கொடுத்தார் சாப்ளின். அதன்பின்னர் "மிஸ்ரர் வேர்தோ, லைம்லைட், எ கிங் இன் நியூயோர்க்" ஆகிய படங்களை எடுத்த இவரின் 1967ல் வெளிவந்த 'எ கௌண்டஸ் ப்ரொம் கொங்கொங்'-(இதில்முக்கியபாத்திரம் மார்லன் பிராண்டோவும், சோபியாலோரன்சு என்பதும் குறிப்பிடத்தக்கது) இவரது இறுதிப்படமாக அமைகிறது.

ஏறத்தாள அரை நூற்றாண்டிற்கும் மேலாக திரையுலகிலிருந்த சாப்ளினின் திரைப்படங்களின் வாயிலாகச் சாதித்தவைகள் ஏராளம். இவரது திரைப்படங்களை - பார்க்கும் போதெல்லாம் அவரை திரையுலகின் மேதை அறிஞர், மாபெரும் மனிதாபிமானி என்றெல்லாம் அழைப்பது எவ்வளவு பொருத்தமானது என்பது புலப்படும்.

"ஒரு நேர்மையான, உண்மையான கலைஞன் மக்களுக்குப் பயன்படாத, மக்களுக்கெதிரான எந்தக் கருத்தையும் காசுக்காக கலையாக்கக்கூடாது" என்று கூறும் சாப்ளின் திரைப்படங்கள் அனைத்திலுமே அவரது இத்தகைய உயர்ந்த நோக்கம், உள்ளார்ந்திருப்பதை அவதானிக்கலாம். வெறும் வியாபாரத்தனத்திற்குள் கலைப்பண்பை இழந்துபோன தமிழ்ச்சினிமாக்களினால் யதார்த்த நிலையை மழுங்கடித்து, மக்களை போதையிலாழ்த்தி பணம் பண்ணும் மக்களின் விரோதிகளிடமிருந்து சினிமாக்கலையைக்கைப்பற்றி மக்களுக்கான, உயர்ந்த கலைப்படைப்பாய் சினிமாவைவளர்த்தெடுக்க முனையும் முற்போக்கு திரைக் கலைஞர்களுக்கு சாப்ளின் திரைப்படங்கள் எப்போதும் வழிகாட்டிக்கொண்டேயிருக்கும்.

www.tamilrangam.net

கருத்துக்கள் கைவசம் இல்லாதவர்களிடத்தே தனிமனித தாக்குதல்களைத்தவிர வேறெதையும் எதிர்பார்க்க முடியாது.

- டாக்டர் கோ. கேசவன்

-OPAL-

வெளியீடு: மக்கள் கலை இலக்கிய அமைப்பு

"THEDAL" B.P:166,92805 PUTEAUX CEDEX

7 வது இதழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்